
செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686424-9-2

108



மனோன்மணீயம் சுந்தரனார்

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



https://www.annacentenarylibrary.org/pages/view/17.%20%20'%E0%AE%AE%E0%AE%A9%E0%AF%8B%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%AE%E0%AE%A3%E0%AF%80%E0%AE%AF%E0%AE%AE%E0%AF%8D'%20%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B0%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D

செந்தமிழ்சிற்பிகள்

'மனோன்மணீயம்' சுந்தரனார் (1855-1897)



அறிமுகம்

பெ. சுந்தரனார் கேரளம், ஆலப்புழையில் பிறந்தவர் . இவர் நாடகாசிரியர், ஆய்வாளர், உரைநடை எழுத்தாளர் என்கிற பல்வேறு பரிமாணங்கள் கொண்டவர். திருவனந்தபுரம் மகராஜாக் கல்லூரியில் பி.ஏ., எம்.ஏ. பட்டங்கள் பெற்றார். தத்துவத்தில் 1880-ல் முதுகலை பட்டம் பெற்றார்.

தமிழ் இலக்கிய வரலாற்றின் தமிழ்நாடகத் துறை, கால ஆராய்ச்சி, கல்வெட்டு ஆய்வு ஆகியவற்றுக்கு வித்திட்டவர் என்கிற சிறப்புக்கு உரியவர்.

தமிழ் பணி

- கரைக்கோட்டை, ஒழுகினசேரி சோழபுரத்தில் உள்ள சோழீஸ்வரன் கோவில் கல்வெட்டுகள் என்று பலவற்றைப்படியெடுத்து உள்ளார்.
- தமிழ் வரலாற்றை கல்வெட்டுகளின் வழியாக ஆராய்ந்து வகுக்கும் முறையை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவர்.
- தமிழின் தனித்தியங்கும் தன்மையையும் பண்பாட்டு மேன்மையையும் வலியுறுத்தியவர்.
- தமிழ்மொழியை திராவிட மொழிக்குடும்பத்தின் தலைமை மொழியாக முன்னிறுத்தியவர்.
- திருநெல்வேலி ஆங்கிலத் தமிழ்க் கல்விச்சாலையின் தலைவராக இரண்டாண்டுகள் பணியாற்றி, அக்கல்விச் சாலையே பின்னர் இந்துக் கல்லூரியாக உயர்வதற்கு உறுதுணையாக இருந்தவர்.
- தமிழ் இலக்கியங்களின் வழியாக தமிழக வரலாற்றின் காலத்தை கணிக்கும் முறைக்கு முன்னோடியான ஆய்வுகளைச் செய்தவர்.
- ‘திருஞானசம்பந்தர் காலம்’ என்னும் இவரது நூல் சம்பந்தரின் காலத்தை ஆதாரபூர்வமாக வரையறை செய்தது. அதிலிருந்து மற்ற காலக்கணிப்புகள் நடைபெற்றன.

மொழிபெயர்ப்பு

பத்துப்பாட்டு, திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக் காஞ்சி ஆகிய மூன்று நூல்களையும் பெ. சுந்தரனார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

படைப்புகள்

- லிட்டன் பிரபு எழுதிய 'ரகசிய வழி' கதையின் தழுவலாகத் தன்னுடைய ‘மனோன்மணியம்’ நாடகத்தைப் பெ.சுந்தரனார்

எழுதினார். நாடக மறுமலர்ச்சிக்கு திருப்புமுனையாக இந்நூல் அமைந்தது.

- 'சாத்திர சங்கிரகம் என்னும் நூற்றொகை விளக்கம்' என்கிற நூலை உரைநடையில் எழுதினார். இந்நூலில் கலைச்சொல்லாக்கம் உண்டு.
- திருவிதாங்கூரின் ஆரம்பகால வரலாறு, ஞானசம்பந்தர் காலம், உதிரியான சில கல்வெட்டுகள், நம்பியாண்டார் நம்பியின் காலம் முதலிய கட்டுரைகளை எழுதினார்.
- ஒரு நற்றாயின் புலம்பல், பொதுப்பள்ளி எழுச்சி, அன்பின் அகநிலை முதலிய பல்வேறு கவிதைகளையும் இயற்றியுள்ளார்.
- சீவராசிகளின் இலக்கணமும், பிரிவும், மரங்களின் வளர்ச்சி, புஷ்பங்களும் அவற்றின் தொழிலும் முதலிய மூன்று அறிவியல் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

விருதுகள்

- இவர் எழுதிய 'நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்' என்ற பாடல் தமிழ் நாடு அரசினரால் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக சூன் 1970 இல் அறிவிக்கப்பட்டது.
- 'மனோன்மணீயம்' என்ற நாடகத்தின் காரணமாக இவர் 'மனோன்மணீயம் சுந்தரனார்' என அழைக்கப்பட்டார்.
- தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களுள் ஒன்றான 'மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்' இவரது பெயரால் அமைக்கப்பட்டுள்ளது.

(😊)(😊)(😊) ௐௐௐௐௐ (😊)(😊)(😊)

மனோன்மணியம் சுந்தரனார் (1855–1897) என்பவர் புகழ்பெற்ற தமிழ் நாடக நூலான "மனோன்மணீயம்" எழுதிய பேராசிரியர், கவிஞர், மற்றும் வரலாற்று ஆய்வாளர் ஆவார். தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வப் பாடலான 'நீராருங் கடலுடுத்த...' எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்தை எழுதியவர் இவரே. இவரின் நினைவாகத்

திருநெல்வேலியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டுள்ளது.

[மனோன்மணியம் சுந்தரனார்](#) பற்றிய முக்கிய குறிப்புகள்:

- **பிறப்பு:** ஏப்ரல் 4, 1855-ல் கேரளா ஆலப்புழையில் பிறந்தார்.
- **பணி:** திருவனந்தபுரம் அரசினர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றினார்.
- **நூல்:** 1891-ல் "மனோன்மணீயம்" என்ற செய்யுள் நாடக நூலை வெளியிட்டார். இது புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் லிட்டன் பிரபு எழுதிய 'சீக்ரெட் வே' (Secret Way) என்ற நூலைத் தழுவி எழுதப்பட்டது

  .**இலக்கியப் பங்களிப்பு:** தமிழ் நாடக இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்படும் இவர், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் இயற்றினார்.
- **இறப்பு:** ஏப்ரல் 26, 1897-ல் காலமானார்.
- **சிறப்பு:** இவரின் தமிழ் மற்றும் வரலாற்று ஆய்வுகளைப் போற்றும் வகையில், தமிழக அரசு, திருநெல்வேலியில் **மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தை** நிறுவியுள்ளது.

இவர் கவிஞர் மட்டுமின்றி, கல்வெட்டு ஆராய்ச்சியாளராகவும், அறிவியல் கட்டுரையாளராகவும் பல்துறை அறிவு பெற்றவராகத் திகழ்ந்தார்.

இலக்கிய வாழ்க்கை

தொடக்கம்

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை திருநெல்வேலியில் பணியாற்றிய காலகட்டத்தில் சைவக்கல்வியிலும் தத்துவ ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்தார். சுந்தரம் பிள்ளையின் முதல்நூல் ஆங்கிலத்தில் 1877-ல் வெளிவந்தது. மே 1888-ல் 'சாத்திர சங்கிரகம் அல்லது நூற்றொகை விளக்கம்' என்னும் நூல் திருவனந்தபுரத்தில் இருந்து வெளிவந்தது.

அதுவே அவருடைய முதல் தமிழ் நூல். 1891-ல் மனோன்மணீயம் நாடகம் வெளிவந்தபின் தமிழறிஞர்களிடம் அறியப்பட்டவரானார்.

பாடல்கள்

சுந்தரம் பிள்ளை திருநெல்வேலியில் இருந்தபோது எழுதிய பாடல்கள் 'சிவகாமியின் சரிதம்' என்னும் தலைப்பில் சிறு பிரசுரமாக வந்தன. பின்னர் மனோன்மணீயம் நாடகத்தின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டன. சைவ சித்தாந்தத் தத்துவம் தொடர்பான இப்பாடல்களை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இராமலிங்கத் தம்புரானின் உரையுடன் வெளியிட்டுள்ளது.

'ஒரு நற்றாயின் புலம்பல்' என்னும் தலைப்பில் அமைந்த இவரது பாடல்கள் விவேக சிந்தாமணியில் (1885) வந்தன. இவை தத்துவார்த்தப் பாடல்கள் வகையைச் சார்ந்தவை. 'பொதுப்பள்ளி எழுச்சி' என்னும் தலைப்பில் சில பாடல்களை விவேக சிந்தாமணியிலும் (1895) அன்பின் 'அகநிலைப் பாடல்கள்' என்னும் தலைப்பில் சில பாடல்களை என்ற பத்திரிகையிலும் (1891) வெளியிட்டுள்ளார். பின்னது புனித பவுல் கூறிய அன்பு பற்றிய கருத்தை அடிப்படையாகக் கொண்டது.

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை எழுதிய தமிழ்த்தாய் வாழ்த்து தமிழகத்தின் அரசுப்பாடலாக அறிவிக்கப்பட்டு பாடப்பட்டு வருகிறது.

அறிவியல், பொது நூல்கள்

சுந்தரம் பிள்ளை எழுதிய 'புஷ்பங்களும் அவற்றின் தொழில்களும்' (1892), 'மரங்களின் வளர்ச்சி' (1892), 'ஜீவராசிகளின் இலக்கணம்' (1897) ஆகிய மூன்று அறிவியல் கட்டுரைகள் விவேக சிந்தாமணியில் வெளிவந்தன பின்னர் அவற்றைச் செந்தமிழ் செல்வி வெளியிட்டது. சுந்தரம் பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரைகள் சென்னை தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரி இதழில் வந்தன. The Ten Tamil Idylls, (1890-1891), Hobbes - The Father of English Ethics (1894-1895), Bentham The Juristic Moralist (1896) என்னும் இக்கட்டுரைகளில்

The Ten Tamil Idylls மட்டும் 1957-ல் நூல் வடிவில் வந்தது. ஆங்கில அறிவியலின் தந்தையாகக் கருதப்பட்ட ஹாப்ஸ் பற்றிய செய்திகளைக் கூறுவது Hobbes the Father of English Ethics என்ற கட்டுரை.

இலக்கிய நூல்கள்

சுந்தரம் பிள்ளை எழுதிய 'நூற்றொகை விளக்கம்' என்னும் உரைநடை நூல் 1888-ல் ஆங்கில முகவுரையுடன் வெளிவந்தது. சைவசித்தாந்த நூல் பதிப்புக்கழகம் 1936-ல் இந்நூலை மறுபதிப்பு செய்துள்ளது. நூற்றொகை விளக்கம் 94 பக்கங்களைக் கொண்ட சிறுநூல் தமிழ் உரைநடை வடிவத்தைப் பழைய மரபின்படி 38 சூத்திரங்களில் விளக்குகிறது. ஒரு நூல் எப்படி அமைந்திருக்க வேண்டும்; உரைநடை வடிவம் எத்தகைய பிரிவுகளை உடையது என்பனவற்றை இந்நூல் விளக்குகிறது.

நாடகம்

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை எழுதிய ஒரே புனைவு மனோன்மணீயம் என்னும் நாடகம். 1891-ல் இந்நூல் வெளிவந்தது. இந்நாடகத்தில்தான் தமிழ்நாட்டின் அரசுப்பாடலாக அறிவிக்கப்பட்டுள்ள தமிழ்த்தாய் வாழ்த்து இடம்பெற்றுள்ளது.

இலக்கிய வரலாற்றாய்வுகள்

மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை தமிழிலக்கியத்தின் காலக்கணிப்பை இலக்கியப்பிரதிகள் சார்ந்து வரையறை செய்வதில் முன்னோடி முயற்சிகளில் ஈடுபட்டவர். கே.என். சிவராஜ பிள்ளை , டி.இலட்சுமண பிள்ளை ,எஸ். வையாபுரிப் பிள்ளை ஆகியோருக்கு முன்னோடியாகச் செயல்பட்டார்.

திருஞானசம்பந்தர் காலம்

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை இலக்கியவரலாற்று ஆய்வுகளுக்காகவே இன்று முதன்மையாக கருதப்படுகிறார். திருஞான

சம்பந்தரின் காலகட்டத்தை அவர் கணித்து வரையறை செய்தது முக்கியமாகக் கருதப்படுகிறது. சென்னை கிறிஸ்தவக் கல்லூரி இதழில் இவர் தொடராக வெளியிட்ட Some Milestones in the History of Tamil Literature or The Age of Thirugnanasambandha என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரைகள் மார்ச் 24,1895-ல் திருவனந்தபுரம் ஹார்விபுரத்தில் ஆசிரியராலேயே நூல் வடிவில் வெளியிடப்பட்டது. அந்நூலுக்கு தொல்லியல் ஆய்வறிஞர் வெங்கய்யா முகவுரை எழுதியுள்ளார். இந்நூல் தென்னிந்திய வரலாற்றாராய்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் ஹூல்ச் (Dr Hultszch) என்பவருக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. திருச்சி டி.ஏ.சொசைட்டி என்னும் நிறுவனம் மார்ச் 10,1909 அன்று இந்நூலை மறுபதிப்பாக வெளியிட்டது.

பின்னர் அந்நூலை தமிழில் மொழியாக்கம் செய்து மேலும் செய்திகளுடன் விரிவுபடுத்தி திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி என்னும் தலைப்பில் 65 பக்கங்களைக் கொண்ட நூலாக வெளியிட்டார்.

19-ம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியக் காலஆராய்ச்சி பற்றி வந்த நூல் இது. எஸ். வையாபுரிப் பிள்ளை இந்நூல் பற்றி "சுந்தரனார் செய்த இந்தக் கால ஆராய்ச்சி பிற்காலத்தில் கிடைத்த கல்வெட்டுகள் வழி உறுதி செய்யப்படுவதுடன் மறுக்க முடியாமலும் உள்ளது" என்கிறார். ஆதிசங்கரர், சம்பந்தரை திராவிட சிசு என்று குறிப்பிட்ட செய்தியை சுந்தரம்பிள்ளைதான் இந்த நூலில் முதலில் கூறுகிறார். திராவிடம் என்னும் சொல் தமிழரைக் குறிக்கப் பயன்பட்டது என்னும் கருதுகோளைத் தமிழ் ஆய்வாளர்களுக்கு எடுத்துக்கொடுத்தவரும் இவர்தான் என ஆய்வாளர் அ.கா. பெருமாள் குறிப்பிடுகிறார்

கால்டுவெல் சம்பந்தர் காலத்து பாண்டிய மன்னனான நின்ற சீர் நெடுமாறன் என்னும் கூன்பாண்டியன் பொ.யு. 1292-ல் மதுரையை ஆண்டவன் எனக் கூறிச் சம்பந்தரை பொ.யு. 13-ம் நூற்றாண்டினர் என்கிறார். சி.வை. தாமோதரம் பிள்ளை கூன்பாண்டியன் 2000 ஆண்டுகளுக்கு முந்தியவன் என்றார். அக் கருத்துக்களை மறுத்து வரலாற்றுச் சான்றுகளுடன் காலவரையறை செய்திருக்கிறார் சுந்தரனார்.

சம்பந்தர், இரண்டாம் புலிகேசியைப் போரில் வென்ற சிறுத்தொண்டர் காலத்தவர்; வாதாபியில் நடந்த இப்போர் பொ.யு. 642-ல் நடந்தது. அதனால் சம்பந்தர் பொ.யு 7-ம் நூற்றாண்டினர் என்கிறார் சுந்தரம் பிள்ளை. வேறு சான்றுகளையும் கொடுத்துச் சம்பந்தர் காலத்தை நிறுவியுள்ளார். பிற்கால ஆராய்ச்சியாளர்கள் இந்தக் காலத்தின் அடிப்படையில் சம்பந்தர் காலத்துக்கு முன்னரோ பின்னரோ எனக் கணித்து பக்தி இயக்கக்காரர்களின் காலங்களை நிர்ணயித்துள்ளனர்.



மனோன்மணியம் சுந்தரனார் சிலை

பத்துப்பாட்டு திறனாய்வு

சுந்தரம் பிள்ளையின் The Tamil Idylls என்னும் சிறுநூல் பத்துப்பாட்டுப் பற்றிய திறனாய்வு நூல். இது 1890-1892 அளவில் எழுதப்பட்டதாயினும் 1953-ல் தான் நூல் வடிவில் வந்தது. உ.வே.சாமிநாதய்யரின் பத்துப்பாட்டுப் பதிப்பு பற்றிய திறனாய்வுக் கட்டுரை இது . இந்நூலில் சுந்தரம் பிள்ளை சங்ககால நக்கீரரின் காலத்தை ஆய்வுக்கு உட்படுத்துகிறார். முருகாற்றுப்படையைக் காலத்தால் பின் தள்ளியதற்குரிய காரணங்களைத் துல்லியமாக முன்வைக்கிறார்.

வரலாற்றாய்வுகள்

கல்வெட்டாய்வு

சுந்தரம் பிள்ளை முன்னோடியான கல்வெட்டாய்வாளர். அன்றைய திருவிதாங்கூர் சம்ஸ்தானத்தின் தொல்லியல் சான்றுகளைச் சேகரிப்பதற்காக ஓர் ஆய்வுகுழுமத்தை தொடங்கினார். 1891ல் அன்றைய அரசர் ஸ்ரீ மூலம் திருநாள் ராமவர்மா அவருக்கு ஆண்டுக்கு ஐம்பது ரூபாய் உதவித்தொகை அளித்து ஆய்வை முறைப்படுத்தினார். 1896ல் சுந்தரம் பிள்ளை திருவிதாங்கூர் அரசின் கௌரவ தொல்லியல் ஆய்வாளராக நியமிக்கப்பட்டார். அவருடைய மறைவுக்குப் பின் அந்தப் பதவிக்கு வந்தவர் பெரும்புகழ்பெற்ற கல்வெட்டாய்வாளரும் இந்து சிற்பவியல் ஆய்வாளருமான டி.ஏ. கோபிநாத ராவ்

சுந்தரம் பிள்ளை நாஞ்சில் நாட்டுப் பகுதியிலும் (சோழபுரம். புரவசேரி) இடநாட்டிலும் (திருவட்டாறு) கல்வெட்டுகளைத் தேடிக் கள ஆய்வு செய்திருக்கிறார். அக்கல்வெட்டுகளின் வழி வேணாட்டு, செய்திகளை முறைப்படித் தொகுத்திருக்கிறார். அந்த ஆய்வுகளில் கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை உதவினார்.

திருவிதாங்கூர் வரலாறு

திருவனந்தபுரத்தில் தொல்லியல் துறையில் 1894 மார்ச் மாதம் 24 ,31 மற்றும் ஏப்ரல் 7 ஆகிய தேதிகளில் சுந்தரம்பிள்ளை ஆற்றிய சொற்பொழிவுகள் Some Early Sovereigns of Travancore என்னும் தலைப்பில் வெளிவந்தன. இதன் இரண்டாம் பதிப்பு 1943-ல் வந்தது. இது நான்கு இயல்களும் மூன்று பின்னிணைப்புகளும் கொண்ட நூல். முதல் மூன்று இயல்களும் வேணாட்டு மன்னர்களின் பட்டியல்களையும் வரலாற்றையும் நான்காம் இயல் திருவிதாங்கூரில் கிடைத்த சில கல்வெட்டுகளையும் கூறுவன. பின்னிணைப்பில் கல்வெட்டு மூலங்களும் சுந்தரம்பிள்ளை எழுதிய விளக்கக் குறிப்பும் உள்ளன.வேணாட்டு அரசர்களின் வரலாற்றை முதல் முறையாக கல்வெட்டுச் செய்திகளின் வழி கணிக்கும் நூல் இது. இந்த நூலுக்காக உ.வே.சாமிநாதையரின் சிலப்பதிகார முதல் பதிப்பை (1892) இவர் பயன்படுத்தியிருக்கிறார். இந்நூல் ஐந்து நூற்றாண்டுகளில் வாழ்ந்த 9 அரசர்களைப் பற்றிக் கூறுகிறது. Directory of Archaeology என்னும் தொகுப்பு நூலையும்

திருவிதாங்கூர் அரசுப் பொறுப்பில் பெ.சுந்தரம் பிள்ளை வெளியிட்டார்.

கொல்லம் காலக்கணிப்புமுறை

திருவிதாங்கூர் உட்பட கேரள வரலாறு கொல்லம் ஆண்டு என்னும் காலக்கணிப்பு கொண்டது. அதன் தோற்றம் மற்றும் வானியல் அடிப்படைகளை மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை விரிவாக ஆராய்ந்தார்.டி.பி.கோபிநாத ராவ் போன்றவர்கள் பொ.யு ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த காலக்கணிப்பு முறை அது என்று கருதினர். அக்கருத்தை மறுத்து அது பொயு 825-ம் ஆண்டில் தொடங்குவது என்றும், வட இந்தியாவில் புழக்கத்திலிருந்த சப்தரிஷிமண்டல காலக்கணிப்பு முறையின் இன்னொருவடிவம்தான் அது என்றும் நிறுவினார்.

இலக்கிய இடம்

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ஆறு தளங்களில் அறிவியக்கப் பங்களிப்பாற்றியவர்.

1. *தமிழ் மறுமலர்ச்சியாளர்.* பேராசிரியர் சுந்தரம் பிள்ளை இருபதாம்நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தின் முதன்மை ஆளுமைகளில் ஒருவராக கணிக்கப்படுகிறார். தமிழின் தனித்தியங்கும் தன்மையையும் பண்பாட்டு மேன்மையையும் வலியுறுத்தியவர்களில் ஒருவர்.
2. *திராவிட இயக்க முன்னோடி.* தமிழ்மொழியை திராவிட மொழிக்குடும்பத்தின் தலைமைமொழியாக முன்னிறுத்தினார். திராவிடம் என்பதை இரு இன அடையாளமாகவும் நில அடையாளமாகவும் முன்வைத்தார். அவ்வாறாக திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவராக கணிக்கப்படுகிறார்
3. *இலக்கிய வரலாற்றாய்வாளர்.* மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை தமிழ் இலக்கியங்களின் வழியாக தமிழக

வரலாற்றின் காலத்தை கணிக்கும் முறைக்கு முன்னோடியான ஆய்வுகளைச் செய்தவர். திருஞானசம்பந்தர் காலம் என்னும் நூல் சம்பந்தரின் காலத்தை ஆதாரபூர்வமாக வரையறை செய்தது. அதிலிருந்து மற்ற காலக்கணிப்புகள் நடைபெற்றன

4. *கல்வெட்டாளர்.* மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை தமிழ் வரலாற்றை கல்வெட்டுகளின் வழியாக ஆராய்ந்து வகுக்கும் முறையை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவர். கேரள வரலாற்றாய்விலும் முக்கியமான தொடக்கச் சித்திரங்களை உருவாக்கினார்.
5. *நாடக ஆசிரியர்.* மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை இலக்கிய ஆசிரியராக மனோன்மணீயம் நாடகம் மூலம் அறியப்படுகிறார். ஷேக்ஸ்பியர் மரபிலான செய்யுள்நாடகம் என்னும் வடிவில் தமிழில் எழுதப்பட்ட முக்கியமான முன்னோடி நூல் அது.
6. *பாடலாசிரியர்.* மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை குறிப்பிடத்தக்க பாடலாசிரியர். அவருடைய நீராரும் கடலுடுத்த தமிழ்நாட்டின் அரசுப்பாடலாக உள்ளது

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையை கே.கே. பிள்ளை தன் சுசீந்திரம் ஆலயம் நூலில் தமிழ் கல்வெட்டாய்வின் முன்னோடி என்று குறிப்பிடுகிறார்.

நூல்கள்

கவிதை

- ஒரு நற்றாயின் புலம்பல் (1885)
- அகநிலைப் பாடல்கள் (1891)
- பொதுப்பள்ளி எழுச்சி (1895)
- நூற்றொகை விளக்கம் (1888)
- சிவகாமி சரிதம்

நாடகம்

- மனோன்மணீயம் நாடகம் (1891)

கட்டுரை

- புஷ்பங்களும் அவற்றின் தொழில்களும் (1892)
- மரங்களின் வளர்ச்சி (1892)
- ஜீவராசிகளின் இலக்கணம் (1897)

ஆங்கிலம்

- The Ten Tamil Idylls, (1890-1891) - (1957)
- Hobbes - The Father of English Ethics (1894-95)
- Bentham The Juristic Moralist (1896)
- Some Milestones in the History of Tamil Literature or The Age of Thirugnanasambandha - 1896.
- Early Sovereigns of Travancore, (1894)

ஆய்வுநூல்கள்

- திருஞானசம்பந்தர் காலம்
- நூற்றொகை விளக்கம் (1885,1889)
- பத்துப்பாட்டு (1891)
- முற்காலத் திருவாங்கூர் அரசர் (1894)
- ஆறாம் நூற்றாண்டுத் திருவாங்கூர் அரசர் (1896)
- திருவாங்கூர் கல்வெட்டுகள் (1897)

4.1 மனோன்மணீயம்

மொத்தம் ஐந்து அங்கங்களில் மனோன்மணீயம் அமைந்து இருக்கிறது. அங்கம் என்பதை ஆங்கிலத்தில் Act என்று குறிப்பிடலாம். களம் என்பதை scene என்று குறிப்பிடலாம். மனோன்மணீயத்தின் முதல் அங்கம், ஐந்து களங்களைக் கொண்டு விளங்குகிறது. இரண்டாம்

அங்கம், மூன்று களங்களைக் கொண்டுள்ளது. மூன்றாம் அங்கம், நான்கு களங்களைக் கொண்டுள்ளது. நான்காம் அங்கம், ஐந்து களங்களையும் ஐந்தாம் அங்கம் மூன்று களங்களையும் கொண்டுள்ளது. ஐந்து அங்கங்களும் இருபது களங்களுமாக மனோன்மணீயம் நாடகம் முழுமை பெற்று இருக்கிறது.

இன்பியல்

பொதுவாக நாடகம் முடியும் நிலையில் இன்பியல் நாடகம் என்றும் துன்பியல் நாடகம் என்றும் இரு நிலைகளில் முடிவடையும். மனோன்மணீய நாடகம் இன்பியல் நாடகமாக முடிவுபெற்றுள்ளது.

கவிதை

மனோன்மணீயம் கவிதை நாடகமாக இருப்பதால் தமிழின் பல பா வகைகள் இதில் இடம் பெற்றுள்ளன. பெரும்பான்மையாக ஆசிரியப்பாவே நாடகம் முழுவதும் பயன்படுத்தப் பட்டுள்ளது. மற்றும் ஆசிரியத் தாழிசை, வெண்பா, கலித்துறை, வெண் செந்துறை, கொச்சகக்கலிப்பா, மருட்பா எனப் பிற பா வகைகளும் இடம் பெற்றுள்ளன. தமிழ்த் தெய்வ வணக்கத்தைச் சேர்த்து மொத்தம் 4502 அடிகளில் இந்நாடகம் அமைந்து உள்ளது.

4.1.1 நாடக ஆசிரியர்

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

மனோன்மணீயம் நாடகத்தை எழுதியவர் பேராசிரியர். பெ. சுந்தரம்பிள்ளை. இவர் இன்றைய கேரள மாநிலத்தில் உள்ள ஆலப்புழை என்னும் ஊரில் 1855ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் பெருமாள் பிள்ளை, தாயார் மாடத்தி அம்மாள். சைவ நெறி போற்றும் குடும்பத்தில் பிறந்த சுந்தரம்பிள்ளை இளமையிலேயே தேவார திருவாசகங்களில் தேர்ச்சி பெற்றவராய் விளங்கினார். இவரது ஞானாசிரியர் கோடக நல்லூர் சுந்தரசுவாமிகள் ஆவார்.

வாழ்க்கையும் பணிகளும்

1877ஆம் ஆண்டு ஆசிரியப் பணியைத் தொடங்கிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளை முதலில் திருநெல்வேலியில் ஆங்கிலத் தமிழ்க் கல்விச்

சாலையில் பணிபுரிந்தார்; பின்னர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவத்துறையில் (Philosophy) ஆசிரியராகப் பொறுப்பேற்றார். அதன் பின்னர்த் திருவனந்தபுரம் அரசர் அரண்மனை வருவாய்த் துறையின் (Revenue Dept) தனி அலுவலராகப் பொறுப்பேற்றார். 1885ஆம் ஆண்டு மீண்டும் தத்துவத்துறையிலேயே பேராசிரியராகப் பணியில் அமர்த்தப் பெற்றார். இறுதி வரையில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தத்துவத் துறையின் தலைமைப் பேராசிரியராகவே இருந்தார்.

தமது நாற்பத்திரண்டாவது வயதில் 26.04.1897 இல் இவர் அமரர் ஆனார்.

படைப்புகள்

இவரது முதல் படைப்பு நூற்றொகை விளக்கம் என்னும் நூலாகும். இந்நூல் 1888ஆம் ஆண்டு வெளிவந்தது. இவரது இரண்டாம் படைப்பு மனோன்மணீயமாகும். இக்கவிதை நாடகநூல் 1891ஆம் ஆண்டு வெளிவந்தது. அடுத்து விதாங்கூரின் பண்டை மன்னர்கள் என்னும் ஆராய்ச்சி நூலை 1894ஆம் ஆண்டு வெளியிட்டார். திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி எனும் நூலை 1895ஆம் ஆண்டு வெளியிட்டார். நூல்கள் மட்டுமன்றி ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் இதழ்களில் எழுதிவந்தார். அவற்றுள் குறிப்பிடத்தக்கது பத்துப்பாட்டுத் திறனாய்வாகும். இது சென்னைக் கிறித்தவக் கல்லூரி இதழில் வெளிவந்தது.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தத்துவத் துறைப் பேராசிரியராக இருந்ததால் பொதுவாக இவரது அனைத்துப் படைப்புகளிலும் தத்துவத்தின் சாயல் கூடுதலாக இருப்பதைக் காணலாம். தமிழ் ஆய்விலும், படைப்பிலக்கியத்திலும் கூடுதலான பணியைச் செய்த பேராசிரியர், இளமையிலேயே மறைந்தது தமிழ் ஆய்வுலகுக்கும் தமிழ் கூறு நல்லுலகுக்கும் பேரிழப்பாகும். குறிப்பாக, தமிழ் நாடக உலகம் ஒரு மிகச் சிறந்த நாடகப் பேராசிரியரை இழந்து விட்டது என்றே கூறலாம்.

4.1.2 கதைச் சுருக்கம்

இனி, மனோன்மணீய நாடகத்தின் கதைச் சுருக்கத்தைப் பார்ப்போம்.

பாண்டிய மன்னன்

சீவகன்

மதுரை மாநகரைத் தலைநகரமாகக் கொண்டு பாண்டிய நாட்டை சீவகன் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவன் அருங்குணங்களின் நாயகன்; கள்ளம் கபடம் சிறிதும் அறியாதவன். அவனுக்குத் தலைமை அமைச்சனாகக் குடிலன் என்பவன் இருந்தான். அவன் ஆட்சிக்கு வேண்டிய சூழ்ச்சித் திறமை அனைத்தையும் உடையவன்; அதே சமயம் தீய குணம் படைத்தவன்.

தலைநகர் மாற்றம்

மன்னனுக்கு உண்மையானவன் போல் நடித்து எளிதில் மன்னனைத் தன் வயப்படுத்திக் கொண்டான். தன் வாய்ப்பையும் வசதியையும் செல்வாக்கையும் வளர்த்துக் கொள்ளத் திட்டம் தீட்டினான். தன் திட்டம் வெற்றி அடைவதற்கு முதல் தடையாக இருப்பது மன்னனின் தலைநகராகிய மாமதுரை என்பதை உணர்ந்தான். எனவே தன் இயல்புகளுக்கு ஏற்ற இடத்தில் தான் செல்வாக்குச் செலுத்த முடியும் என்ற இடத்தில் தலைநகரை மாற்றத் திட்டம் தீட்டினான். அவ்வாறே அரசனின் ஒப்புதலுடன் திருநெல்வேலிக்குத் தலைநகரை மாற்றினான். அங்கே கோட்டை கொத்தளங்களை உருவாக்கினான்.

பாண்டிய மன்னனின் குலகுரு

சுந்தர முனிவர்

மன்னன் சீவகனின் குலகுருவாக விளங்கியவர் சுந்தர முனிவர். தலைநகர் மாற்றத்தால் மன்னனுக்குத் தீங்கு விளையுமோ என்று சுந்தர முனிவர் அஞ்சினார். எனவே பாண்டியனுக்கு வர இருக்கும் தீங்கைத் தடுக்க எண்ணித் தானும் திருநெல்வேலியில் குடியேறினார்.

தன் குலகுரு நெல்லைப் பகுதிக்கு வந்திருப்பதை மன்னன் அறிந்தான். தன் அரண்மனைக்கு அவரை வரச் செய்தான். புதிய தலைநகரின் கோட்டைகள், அரண்மனை ஆகியவற்றைச் சுற்றிக் காட்டினான். அவற்றின் நிலையாமையைச் சுந்தர முனிவர் மன்னனுக்கு உணர்த்தினார். மன்னனின் குடும்பத்திற்கும், அரண்மனை முதலிய மற்ற இடங்களுக்கும் நலமும் வளமும் கூடுவதற்குச் சில சிறப்புப் பூசைகள் நடத்த வேண்டும் என்று கூறினார். அதற்காக

அரண்மனையிலேயே ஒரு பகுதியில் தமக்குத் தனி அறை வேண்டும் என்று கூறிப் பெற்றுக் கொண்டார்.

மனோன்மணியும் வாணியும்

மனோன்மணி

பாண்டிய மன்னன் சீவகனின் ஒரே மகள் மனோன்மணி. அழகிய தோற்றத்தை உடையவள். அருள் உள்ளத்தினள். பதினாறு வயது நிரம்பிய பருவ மங்கை. அவளுக்கு உயிர்த் தோழியாய் வாணி விளங்கினாள். இவள் கள்ளம் கபடம் அற்றவள். மனதில் பட்டதை மறைக்காமல் பேசிப் பழகியவள்.

வாணியின் திருமணப் பேச்சு

வாணியின் காதலன் நடராசன். சிறந்த குணங்களை உடையவன். வாணியின் தந்தையின் பெயர் சகடன். இவன் பொருள் ஆசைமிக்கவன். தன் மகளைக் குடிலனின் மகன் பலதேவனுக்கு மணம் முடித்துக் கொடுத்து அதன் மூலம் தனக்குச் செல்வத்தையும் சமூக மதிப்பையும் தேடிக் கொள்ள விரும்பினான்.

கனவில் வந்த காதலன்

புருடோத்தமன்

சேரநாட்டு அரசன் புருடோத்தமன் சிறந்த வீரன். இவனது திருவுருவத்தை மனோன்மணி கனவிலேயே கண்டு காதலுற்றாள். காதல் நோயால் வாடினாள். அவள் உடல் நோய்க்குக் காரணம் தெரியாமல் மன்னன் சீவகன் வருந்தினான். அப்போது சுந்தரமுனிவர் அங்கே வந்தார். மனோன்மணிக்கு ஏற்பட்டது காதல் நோய் என்றும், திருமணமே அதற்கு உரிய சரியான மருந்து என்றும் சுந்தரர் தம் குறிப்பால் உணர்ந்தார். மனோன்மணிக்குப் பொருத்தமானவன் சேரமன்னன் புருடோத்தமனே என்பதைச் சீவகனிடம் தெரிவித்தார். இச்செயலை எளிதில் நிறைவேற்றக் கூடியவன் வாணியின் காதலன் நடராசனே என்றும் கூறினார்.

ஏற்கனவே நடராசனைப் பற்றி வாணியின் தந்தை சகடன் கூறிய சொற்களால் சீவகன் நடராசன் மீது சினமுற்று இருந்தான். எனவே, சுந்தர முனிவரின் நன்மொழியைச் சீவகன் ஏற்கவில்லை. மேலும் குடிலன் சீவகனின் மனத்தைத் தன் தந்திர வலையில் கட்டிப் போட்டு இருந்தான். எனவே மன்னன் அவனது கைப்பாவை ஆகிவிட்டான்.

குடிலன் சூழ்ச்சி

புருடோத்தமன் சீவகனின் மருமகனாகி விட்டால் தன் சொல்வாக்குச் சீவனிடம் குறைந்துவிடும் என்று எண்ணிய குடிலன், அதைத் தடுக்கத் திட்டம் தீட்டினான். மேலும் தன் மகன் பலதேவனுக்கே மனோன்மணியை மணம் முடித்தால் பாண்டிய நாடே தன் கட்டுப் பாட்டில் வந்துவிடும் என்றும் கனவு கண்டான்.

'பெண் வீட்டார் பிள்ளை வீட்டாரிடம் மணம் பேசிச் செல்லுதல் வழக்கம் அல்ல இருப்பினும், புருடோத்தமனின் மனநிலையை முதலில் அறிந்து கொள்வோம்' எனக் கூறினான். அதற்கு முதற்படியாக, ஏதேனும் ஒரு காரணம் கொண்டு தன் மகன் பலதேவனைத் தூது அனுப்பலாம் என்றும் மன்னனிடம் கூறினான். மன்னனும் அதற்கு உடன்பட்டுப் பலதேவனைத் தூதுவனாக அனுப்பினான்.

கனவில் வந்த காதலி

சேர நாட்டு மன்னன் புருடோத்தமனும் மனோன்மணியைப் போலவே கனவு கண்டான்; கனவில் வந்த மனோன்மணியிடம் காதல் கொண்டான். நாளுக்கு நாள் கனவு வளர வளர அவன் உள்ளம் மிகவும் வாடியது. இந்த வேளையில்தான் பலதேவன் தூதுவனாகப் புருடோத்தமன் அவைக்குச் சென்றான். தன் தந்தையாகிய குடிலன் சொல்லிக் கொடுத்ததற்கு ஏற்ப புருடோத்தமனிடம் வேண்டும் என்றே தகாத எதிர்வாதம் செய்து பாண்டிய மன்னன் மீது போர் தொடுக்கும் அளவிற்கு வாதத்தைப் பெரிது படுத்திவிட்டான். இதனால் போர் ஏற்பட்டது.

போர்

சேரநாட்டுப் படைகளும் பாண்டிய நாட்டுப் படைகளும் திருநெல்வேலிக்கு எதிரில் ஒன்றுடன் ஒன்று போரிட்டன. போரில்

பாண்டிய நாட்டுப் படையில் குழப்பம் ஏற்பட்டது. அதனால் அப்படை ஏறக்குறையத் தோல்வி நிலையை அடைந்தது. பாண்டிய மன்னன் சீவகன் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டது. ஆனால் நாராயணன் என்னும் போர் வீரனால் சீவகன் காப்பாற்றப்பட்டான். நாராயணன் நடராசனின் நண்பன். குடிலனின் சூதுகளை நன்கு அறிந்தவன்.

கழுவேற்றம்

அரண்மனை வந்து சேர்ந்த சீவகன் தோல்விக்கான காரணத்தை ஆராயத் தொடங்கினான். சூழ்ச்சித் திறமும் சூது எண்ணங்களும் நிரம்பப் பெற்ற குடிலன், நாராயணனால்தான் இப்பெரிய தோல்வி ஏற்பட்டது என மன்னன் நம்புமாறு கூறினான். அதனால் நாராயணனைக் கழுவேற்றிக் கொல்லும் படி சீவகன் கட்டளையிட்டான், இந்த வேளையில் சீவகனுக்கு ஒரு கேடு வர இருப்பதை உணர்த்தி அதற்காக முக்கிய ஆலோசனை நடத்த வேண்டும் என்று சுந்தர முனிவர் செய்தி அனுப்பி இருந்தார். எனவே நாராயணனைக் கழுவேற்றுவதைத் தற்காலிகமாகச் சீவகன் நிறுத்தி வைத்தான்.

இரகசியப் பாதை, அதிசய மனிதர்

சுந்தரமுனிவர் அரண்மனையில் தனக்காக ஒதுக்கப்பட்ட அறையிலிருந்து தனது ஆசிரமம் வரையில் பூமிக்கும் கீழே இரகசிய வழி ஒன்றை ஏற்படுத்தி இருந்தார். இப்போது அவ்வழியே சீவகன், மனோன்மணியை அழைத்துக் கொண்டு தன் ஆசிரமத்தில் வந்து பார்க்குமாறு வேண்டி இருந்தார். ஆனால் அரண்மனை, கோட்டை ஆகியவற்றில் சீவகன் அளவற்ற அன்பு கொண்டிருந்ததால் தான் வர மறுத்துவிட்டுத் தன் மகள் மனோன்மணியை மட்டும் நடுஇரவு வேளையில் அனுப்புவதற்கு ஒத்துக் கொண்டான்.

மனோன்மணியை அனுப்பி வைக்கும் நடுஇரவு நேரம் வந்தபோது மன்னனுக்கு மகள் மேல் அளவில்லாத பாசம் ஏற்பட்டது. எனவே மன்னன் குழம்பிவிட்டான். குடிலனை அழைத்தான். சுந்தரர் தன்னிடம் சொன்ன செய்திகளைக் குடிலனிடம் சொல்லி அவன் என்ன கருதுகிறான் என்பதைத் தான் அறிந்து கொள்ள முயன்றான். சுந்தரர் ஏற்படுத்திய இரகசிய வழியைப் பற்றியும் குடிலனிடம் கூறிவிட்டான்.

கெடுமதிக் குடிலன்

கெடுமதி படைத்த குடிலன் சீவகனுக்கு எதிராகவும் தனக்குச் சாதகமாகவும் உடனே திட்டம் தீட்டி விட்டான். நடு இரவு வேளையில் மனோன்மணியைச் சுந்தரரிடம் அனுப்பலாம் என்றும் ஆனால் அவள் கன்னியாய்ச் செல்வது தகாது என்றும் கூறினான். சுந்தரரிடம் அனுப்புவதற்கு முன் தன் மகன் பலதேவனுக்கு மனோன்மணியைத் திருமணம் முடித்து அனுப்பலாம் என்றும் கூறினான். சீவகனும் அதற்கு ஒத்துக் கொண்டான்.

பின்னர், குடிலன் இரகசிய வழியைக் கண்டறிய உடனே புறப்பட்டான். பூமிக்குக் கீழே சென்ற அந்த இரகசியவழி சேரநாட்டுப் படைகள் தங்கி இருந்த பாசறைக்கு அருகில் கொண்டு போய் விட்டது. அந்த வழியைச் சேர மன்னன் புருடோத்தமனிடம் காட்டிக் கொடுத்து விட்டால் போரே நடைபெறாமல் எளிதில் அவன் அரண்மனையைக் கைப்பற்றி விடுவான் என்று நினைத்தான்.

ஒரு குடம் தாமிரபரணி ஆற்று நீரும்; பாண்டியனுக்கு உரிய வேப்ப மாலையும் தன் தோல்விக்கு அடையாளமாகக் கொடுத்து விட்டால் தான் போரை நிறுத்தி விடுவதாகத் தன் தூதுவன் மூலம் புருடோத்தமன் முதல் நாள் போரில் சொல்லிவிட்டது இப்போது குடிலனின் நினைவுக்கு வந்தது. இதையே காரணம் காட்டி இப்போது சீவகனைப் பிடித்துக் கொடுத்துவிட்டுத் தான் நாட்டைக் கைப்பற்றி விடலாம் என்று குடிலன் எண்ணினான்.

குடிலன் கைது

இந்த நினைவுகளுடன் அவன் பாசறையை நோக்கி நடந்தான். பாசறையில் இருந்த புருடோத்தமன் தூக்கம் இல்லாமல் இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தான். கனவில் வந்த மனோன்மணியின் உருவம் மீண்டும் அவன் கனவிலும் நினைவிலும் நிழலாடியது. அப்போது குடிலன் அவனைச் சந்தித்தான். தன் தீய எண்ணத்தை நல்லவன் போல் நடித்து வெளிப்படுத்தினான். ஆனால் தன்னலங் கருதாத புருடோத்தமன், தீய எண்ணம் உடைய குடிலனைக் கைது செய்யுமாறு கூறினான். கைது செய்த நிலையிலேயே அவனை அழைத்துக் கொண்டு இரகசிய வழி வழியாகத் தன் வீரர்களுடன் அரண்மனையை நோக்கி வந்துகொண்டு இருந்தான்.

கண்டான்; வென்றான்

இந்த வேளையில், சீவகன் மனோன்மணியைப் பலதேவனுக்கு மணம் முடிக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொண்டு இருந்தான். சேரநாட்டு மன்னனால் பாண்டிய நாட்டுக்கு வர இருக்கும் பேராபத்தை மனோன்மணிக்கு உணர்த்தினான். தன் தந்தையின் நிலைமையை எண்ணி இரக்கம் கொண்டு மனோன்மணியும் பலதேவனை மணக்க ஒத்துக் கொண்டாள். சுந்தர முனிவரும் வரவழைக்கப்பட்டார். மனோன்மணியின் வேண்டுகோளுக்கு இணங்க நாராயணனும் விடுவிக்கப் பெற்று நடராசனும் நாராயணனும் அங்கே வந்து சேர்ந்தனர்.

பலதேவன் மனோன்மணிக்கு மாலை சூடத் தயார் ஆனான். அப்போது இரகசிய வழியாகக் குடிலனை இழுத்து வந்த புருடோத்தமன், திடீரென வெளிப்பட்டான். மனோன்மணி, தான் கனவில் கண்டு மகிழ்ந்த புருடோத்தமன் உருவத்தை நேரில் கண்டதும் மகிழ்ச்சியில் மயக்க நிலைக்கு ஆளானாள். மன்னன் கழுத்தில் மாலையைச் சூட்டி அவன் மார்பிலேயே மயங்கி விழுந்தாள். மன்னன் கனவில் வந்தவளும் மனோன்மணியே ஆதலால் அவனும் மகிழ்ச்சியுடன் அவளைத் தாங்கிப் பிடித்தான். குடிலனின் தீய குணமும், சூழ்ச்சியும் அங்கே வெளிப்பட்டன. சீவகன் மனோன்மணியையும் புருடோத்தமனையும் வாழ்த்தினான்.தன் குரு சுந்தர முனிவரால் தெளிவு பெற்றான்.

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-sep16/31519-2016-09-23-03-25-43

மனோன்மணியம் சுந்தரனார்

க.காமராசன்

அ.கா.பெருமாள் எழுதிய ‘மனோன்மணியம் சுந்தரனாரின் இன்னொரு பக்கம்” என்ற நூலை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் அண்மையில் வெளியிட்டுள்ளது.



தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடியவர், மனோன் மணியம் நாடகத்தை எழுதியவர் என்ற சுந்தரனாரின் ஒரு பக்கம் பரவலாக அறியப்பட்டது. தத்துவவியலாளர், வரலாற்று ஆராய்ச்சியாளர், கல்வெட்டு ஆய்வாளர் முதலான சுந்தரனாரின் இன்னொரு பக்கம் பரவலாக அறியப்படாமல் உள்ளது. இந்த இன்னொரு பக்கத்தை அ.கா.பெருமாளின் நூல் சுருக்கமும் தெளிவும் கொண்ட நடையில் எடுத்துச் சொல்கிறது.

இந்த நூல் வாழ்வும் பணியும், நாடகாசிரியர், ஆராய்ச்சியாளர், உரைநடையாளர் ஆகிய நான்கு தலைப்புகளில் சுந்தரனாரைப் பற்றி எடுத்துரைக்கிறது. சுந்தரனாரைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள பதிமூன்று பின்னிணைப்புகள் நூலில் கொடுக்கப் பட்டுள்ளன. இந்தப் பின்னிணைப்புகள் ஆய்வாளர்களுக்கும் வாசகர்களுக்கும் ஆர்வமூட்டக் கூடியவை.

இந்த நூல் காலனியமும் தமிழ்ப் புலமையும் எவ்வாறு ஒன்றையன்றை எதிர்கொண்டது என்பதைப் பற்றி புரிந்துகொள்ளவும் துணை

செய்கிறது. நீண்ட வரலாறு கொண்ட தமிழ்ப் புலமை மரபு காலனிய ஆட்சியின் தொடக்க காலத்தில் ஒரு புதிய நெருக்கடிகளைச் சந்தித்தது.

அறிவுசார் மதிப்பிலும், புதிய காலனிய சமூக அமைப்பின் வேலைவாய்ப்பு களிலும், அரசாங்க நிர்வாகத்திலும் அதன் இடம் என்ன என்ற கேள்வி எழுந்தது. புதிய ஆங்கிலக் கல்வி முறையில் கல்வி கற்ற சுதேச அறிவாளிகள் தமிழ்ப் புலமை மரபைப் புதிய சூழலில் மீள்-உருவாக்கம் செய்ய முயன்றனர்.

பழம் நூல்களை அச்சு வாகனம் ஏற்றும் நடவடிக்கையின் மூலமும், பழம் மரபுக்குப் புதிய அர்த்தப்பாடுகளைத் தருவிப்பதன் மூலமும், காலனியம் அறிமுகம் செய்த அறிவுப் பரப்பைத் தமிழ்ப் புலமை மரபு நிலைநின்று எதிர்கொள்வதன் மூலமும் இதனைச் செய்தனர். அந்த வகையான முதல் தலைமுறை அறிவாளிகளில் ஒருவர் சுந்தரனார்.

இதனை மனோன் மணியம் சுந்தரனாரின் இன்னொரு பக்கம் நூல் நேரடியாக விவாதிக்க வில்லை. ஆயினும், இந்நூல் தரும் விவரங்கள், விளக்கங்கள் அந்த விசயத்தை நோக்கி வாசகரைத் தள்ளுகிறது. இதைப் பற்றி இந்நூல் மதிப்புரையின் இறுதியில் விவாதிக்கலாம்.

சுந்தரனாரின் வாழ்வும் பணியும்

பெ. சுந்தரனார் 1855 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் தேதி ஆலப் புழையில் பிறந்தார். திருவிதாங்கூர் சமஸ்தானம் ஐரோப்பாவுடன் வாணிகம் செய்ய உருவாக்கிய சிறு துறைமுக நகரம் ஆலப்புழை. சுந்தரனாரின் முன்னோர் நெசவுத் தொழில் செய்த மக்களுக்கு சலுகை கொடுக்கப் பட்டதால் ஆலப் புழைக்குக் குடி பெயர்ந்த வேளாளர் குடும்பங்களில் ஒன்று என்று அ.கா.பெருமாள் கூறுகிறார். அவரது பெற்றோர் துணி வணிகம் செய்த பெருமாள் பிள்ளை-மாடத்தி அம்மாள்.

சுந்தரனார் பிறப்பதற்கு முன், சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பே, கிழக்கிந்திய கம்பெனியின் பிரதிநிதி முறை ஆளுகையின் கீழ் திருவிதாங்கூர் சமஸ்தானம் வந்துவிட்டது. அவர் பிறந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பிரித்தானிய பேரரசின் நேரடி ஆளுகைப்

பகுதியாக அறிவிக்கப்பட்ட பிரித்தானிய இந்தியப் பேரரசின் சென்னை மாகாணத்தின் அங்கம் ஆகிவிட்டது.

அந்த வகையில் காலனிய அரசு இயந்திர அலுவல்முறையும், கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட பிற பண்பாட்டுக் களங்களும் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் உருவாகின. ஆலப்புழையில் பெ.சுந்தரனார் தொடக்கப் படிப்பைத் திண்ணைப் பள்ளிக்கூடத்திலும், மெட்ரிக் குலேசன் படிப்பை ஆங்கில வெர்னாக்குலர் பள்ளியிலும் முடித்தார்.

திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில், 1871-இல், அதாவது தமது 21வது வயதில் இளங்கலைப் பட்டத்தையும், 1880ஆம் ஆண்டு, அதாவது 25வது வயதில் முதுகலைப் பட்டத்தையும் தத்துவத்தில் பெற்றார்.

சுந்தரனார் தமிழ் இலக்கிய, இலக்கணத்தை எவ்வாறு படித்துக் கொண்டார் என்று தெளிவாகத் தெரியவில்லை. வீட்டிலும், ஸ்ரீ கோடகநல்லூர் சுவாமிகளிடமும் சைவசித்தாந்த சாத்திரங்களைப் பாடம் கேட்டுள்ளார்.

42 ஆண்டு காலமே (1855-1897) வாழ்ந்த சுந்தரனார் 21 ஆண்டுகள் பணி செய்தார். பெரும் பாலும் கல்வி கற்பிக்கும் பணியிலும் ஆய்வுப் பணியிலும் ஈடுபட்டார். இதில் 3 மட்டுமே சமஸ்தான நிர்வாகப் பணி. அதிலும்கூட கல்வெட்டு ஆராய்ச்சிப் பணியில் கவனம் செலுத்தியுள்ளார்.

திருவிதாங்கூர் அரசர் வரலாறு குறித்து எழுதிய ஆங்கில நூல், மனோன்மணியம் கவிதை நாடகம், நூற்றொகை விளக்கம், திருஞானசம்பந்தர் காலம் பற்றியும் நம்பியாண்டார் நம்பியின் காலம் பற்றியும் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், பத்துப்பாட்டை ஆங்கிலத்தில் அறிமுகம் செய்தும் அவற்றில் சிலவற்றை மொழிபெயர்த்தும் எழுதிய கட்டுரை ஆகியவை சுந்தரனாரின் தமிழியல் பங்களிப்புகள். இவற்றைப் பற்றி அ.கா.பெருமாள் விரிவாக எழுதியுள்ளார்.

இவை பற்றி எடுத்துரைப்பதின் வழி சுந்தரனாரின் பன்முகத்தை எடுத்துக்காட்டுவதில் அ.கா.பெருமாள் கவனம் செலுத்தியுள்ளார்.

திருஞானசம்பந்தர் காலம் பற்றிய ஆய்வுப் பணியில் சுந்தரனார் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

தமிழ் இலக்கியங்களின் காலத்தை நிர்ணயிப்பதில் அன்றைய ஐரோப்பிய அறிஞர் களிடையே நிலவிய இன மையவாதக் கண்ணோட்டம் நிலவியது. அதன் விளைவாக காலத்தை முன்தள்ளுவதிலும் பின்தள்ளுவதிலும் அறிவுக்குப் பொருத்த மில்லா வாதங்கள் நிலவின. அந்த நிலையில் நியாயத் தருக்க முறைப்படி திருஞானசம்பந்தர் காலத்தை கி.பி. 7ஆம் நூற்றாண்டு எனச் சுந்தரனார் நிறுவினார். இது தமிழ் இலக்கியங்களின் காலவரிசையைத் தெளிந்து கொள்வதில் மிகப் பெரிய பங்களிப்பைச் செலுத்தியது.

சுந்தரனாரின் படைப்புகளில் மனோன்மணியம் நாடகமே சுந்தரனாரைத் தொடர்ந்து தமிழ்ச் சமூகம் நினைவில் வைத்துக்கொள்ள காரணம். இந்த நூல் இன்றுவரை தமிழ்க் கல்வியில் நாடகப் பனுவல் பாடநூலாக இருந்து வருகிறது. இந்த நூலில் ஒரு விதமான நவீன தேசிய உணர்ச்சி தெரிவதாக வையாபுரிப் பிள்ளை எடுத்துக் காட்டியுள்ளார்.

சுந்தரனாரைப் பற்றி மதிப்பிட்டுப் பின்வருமாறு வையாபுரிப் பிள்ளை கூறுகிறார்:

சென்ற நூற்றாண்டின் இறுதியிலே பெரும்புகழ் பெற்று விளங்கிய தமிழ்ப் பெரியார்களுள் அறுவர் சிறப்பாக எடுத்துச் சொல்லுதற்குரியர். அவர்களாவர்: ராவ் பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளை, வி.கனகசபைப் பிள்ளை, மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பூண்டி அரங்கநாத முதலியார், இராஜமய்யர் என்று பெயர் வழங்கிய சுப்பிரமணிய அய்யர், பெ. சுந்தரம் பிள்ளை.

இவ் அறுவரும் ஆங்கிலம் கற்று மேனாட்டுக் கலைப் பண்பில் திளைத்துத் தம் தாய்மொழியாகிய தமிழ் மொழிக்கு ஒவ்வொரு வகையிலே தொண்டு புரிந்த வர்கள்... சுந்தரம் பிள்ளை தமிழிலக்கிய ஆராய்ச்சி, தமிழிலக்கிய சரிதம், தமிழ் நாடகம், தத்துவநூற் புலமை இவற்றில் எல்லாம் மேம்பட்டு, சிறந்த நூல்கள் இயற்றி, இத்துறைகள் வளர்ச்சியடை வதற்குக் காரணமாயிருந்தார்.

இந்த மதிப்பீடு இன்றும் கவனத்தில் கொள்ளத் தக்கது. வையாபுரிப் பிள்ளை குறிப்பிடும் அனைவருமே தேச உணர்ச்சி, சமூக சீர்திருத்தம், புதுமையைத் தழுவிக் கொள்ளுதல், பழமையைப் போற்றுதல் ஆகிய பண்புகளைக் கொண்டிருந்தனர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அ.கா.பெருமாள் சுந்தரனாரின் இந்த முகத்தை அதிகமாக விவாதிக்க வில்லை. வையாபுரிப் பிள்ளை சுந்தரனாரின் இன்னொரு முக்கிய முகம் தத்துவநூற் புலமையாளர் என்னும் முகம் ஆகும். இதைப் பற்றியும் அ.கா.பெருமாள் கவனம் செலுத்தவில்லை. சுந்தரனாரின் நூற்றொகை விளக்கம் என்ற நூல் பற்றிய விவரிப்பின் போதுகூட, அதை ஒரு உரைநடை நூல் என்னும் அளவிலேயே விளக்கியுள்ளார்.

சுந்தரனார்: ஒரு தத்துவநூற் தமிழ்ப் புலமையாளர்

காலனிய அரசால் உருவாக்கப் பட்ட புதிய கல்வி முறையில் சுந்தரனார் தத்துவம் பயின்று இளங்கலைப் பட்டமும் முதுகலைப் பட்டமும் பெற்றவர். மனோன்மணியம் நாடகத்தில் தத்துவ விவாதங்கள் உண்டு. தத்துவ ஆராய்ச்சியின் பயனாகவே சுந்தரனார் வரலாற்று ஆராய்ச்சியிலும் புகுந்தார் என்பது வையாபுரிப் பிள்ளையின் கூற்று. நூற்றொகை விளக்கம் என்ற நூல் சுந்தரனார் திட்டமிட்டிருந்த மிகப் பெரிய தத்துவ ஆய்வுநூல் திட்டத்தின் ஒரு சிறிய பகுதியே ஆகும்.

நூற்றொகை விளக்கம் என்ற தலைப்பில் உள்ள நூல் என்ற சொல் இன்று நாம் பயன்படுத்தும் புத்தகம் என்ற பொருளைக் குறிக்கும் சொல் அல்ல; (அறிவுத்) துறை என்ற சொல்லுக்கு ஈடானது ஆகும். நூல் என்பது அறிவினை உணர்த்தும் கருவி என வரையறுக்கும் சுந்தரனார், நூலும் சாஸ்திரமும் ஒரு பொருளுடையன என்று கூறுகிறார். “சிறப்புப் பொருள் களை நீக்கிப் பொதுவாக எதனையாவது வரன்முறை சாஸித்து ஒழுங்குபடுத்தி அறிவிப்பது என்ற பொது அர்த்தத்தை மாத்திரம் தருவதாகக் கருதில் சாத்திரமும் நூலும் ஒரு பொருளுடையனவேயாம்” என்பது சுந்தரனார் கூற்று.

பேரறிவு, சிற்றறிவு, புலனறிவு என்று அறிவை மூன்றாக வகுக்கின்றார். அதேபோல நூலையும் மதநூல், பொது நூல், கலைநூல் என்று மூன்றாக

வகுக்கிறார். மத நூல், கலை நூல் ஆகிய இரண்டையும் அதிகம் பேசாது, பொதுநூல் குறித்து விரிவாகப் பேசுகிறார்.

முதல் நூல் (departmental sciences), வழிநூல் (derived sciences), சார்புநூல் (practical sciences) என பொதுநூலை மூன்றாகப் பகுக்கிறார். தத்துவநூல், கணித நூல், சத்தி நூல், இரசாயன நூல், உயிர் நூல், உளநூல் ஆகியவை பொதுநூல். சோதிடநூல், பௌமிய நூல், வியாகரணம் முதலானவை வழிநூல்.

தருக்க நூல், தரும நூல், சிற்ப நூல், நாவீகம், தனுர் வேதம், ஆயுள் வேதம் முதலானவை சார்பு நூல். அறிவை வகைப்படுத்திய முறையிலும், நூலை வகைப்படுத்திய முறையிலும் அவர் மரபார்ந்த கலைச்சொற்களைப் பயன்படுத்தினாலும், அச்சொற்களைப் புதிய அர்த்தங்களைச் சூத்திர விளக்கத்தில் அளிக்கிறார். அதைப் பற்றி விவரிப்பு விரிந்து செல்லுமாதலால், இவ்விடத்தில் தவிர்த்துக் கொள்கிறேன்.

அக்காலச் சென்னை மாகாணத்தின் சுதேச அறிவாளி களிடையே மூன்று விதமான போக்குகள் நிலவின. மரபார்ந்த மத, தத்துவ நிலைப்பாடுகளில் நின்று கொண்டு வாதப்போர் நிகழ்த்தும் போக்கு ஒன்று.

மற்றொன்று ஐரோப்பிய மரபில் கரைந்துபோய், சுதேச மரபுகளை இகழ்ந்து நோக்குவது. சுதேச மரபுகளில் நின்று, காலனியத்தால் அறிமுகமான அறிவுப்பரப்பை உள்வாங்கிக் கொள்ள முனையும் போக்கு. இந்தப் போக்கைச் சேர்ந்தவர்களே நியாய இலக்கணம் எழுதிய யாழ்ப்பாணம் முத்துக்குமாரர் சிதம்பரம் பிள்ளை, சுந்தரம் பிள்ளை போன்றவர்கள்.

சுந்தரனார் மேற்கத்திய அறிவுப்பரப்பை ஆர்வத் தோடு வரவேற்று உள்வாங்கிக் கொண்டாலும், தமிழ் மரபில் நின்றே யோசிக்கிறார் போலத் தெரிகிறது. அறிவுத் துறைகளை வகைதொகைப்படுத்தி விளக்கும் முறை இதனை உணர்த்துகிறது.

அதுமட்டுமல்லாமல் நூற்றொகை விளக்கம் சூத்திரங்களுக்கு எழுதிய விளக்கவுரையிலும் மரபான அத்வைத மரபிலோ, சித்தாந்த மரபிலோ நில்லாமல், ஆனால் அதே வேளையில் மேற்கத்திய தத்துவ மரபிற்குள்ளும் கரைந்து போகாமல், அறிவு, அறிவுப் புலங்கள் பற்றியெல்லாம் ஐரோப்பாவின் மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்களைப் போன்று முழுதளாவிய நோக்கில், புதிய வகையில் தமது சொந்த மரபுநிலை நின்று சிந்தனை செய்கின்றார்.

இந்த விசயம் பற்றி மேலும் இலக்கிய மாணவர் களும், வாசகர்களும் சிந்திப்பதற்கான வெளி திறந்து கிடக்கிறது. அதற்கு அ.கா.பெருமாள் எழுதியுள்ள நூல் துணை செய்யும். மனோன்மணியம் சுந்தரனாரின் இன்னொரு பக்கம் என்ற சிறிய, அறிவார்ந்த நடையில் எழுதப்பட்ட நூலே இப்படியான புதிய பரப்புகளுக்கு உந்தித்தள்ளும்.


மனோன்மணியம் சுந்தரனாரின் இன்னொரு பக்கம்
அ.கா.பெருமாள்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098

இந்து தமிழ் திசை

https://www.hindutamil.in/news/opinion/columns/970778-the-son-of-the-history-of-tamil-literature.html

சுந்தரனார்

தமிழ் இலக்கிய வரலாற்றின் தலைமகன்!



'உலகத் தரம் வாய்ந்த இலக்கியம் படைத்த தமிழர்களுக்கு, தங்கள்வரலாற்றை முறையாக ஆவணப்படுத்தத் தெரியவில்லை; தமிழர்களுக்கு வரலாற்று உணர்வு மிகக் குறைவு' என்றெல்லாம் வரலாற்றுலகில் பேசப்பட்ட காலம் உண்டு. இப்படி இலக்கிய வரலாற்றுத் திசையறியாமல் அவமானப் புயலில் அலைக்கழிக்கப்பட்ட தமிழிலக்கிய வரலாற்றுக் கப்பலுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகத் தோன்றியவர்தான் மனோன்மணீயம் சுந்தரனார்(1855).

ஆங்கிலத்தில் ஆய்வு முடிவுகள்:

தமிழ் இலக்கியப் புலமை, சைவ சமய நூல்களின் ஆழ்ந்த வாசிப்பு, கல்வெட்டு ஆய்வில் தேர்ச்சி, பிறமொழிப் புலமை எனப் பன்முகத்திறன் படைத்தவராக இருந்ததால், தமிழ் இலக்கியங்களின் வரலாற்றுப் பெருமையையும், சைவ சமயச் சான்றோர் திருஞானசம்பந்தரின் காலத்தையும் தக்க ஆதாரங்களுடன் சுந்தரனார் உறுதிப்படுத்தினார். தமிழ் இலக்கியங்களின் வரலாறு ஆங்கிலேய ஆராய்ச்சியாளர்களால் கேள்விக்குறியானபோது, அதைத் தனது ஆழ்ந்த புலமையால் வென்றார்.

தனது ஆய்வு முடிவுகளை ஆங்கிலத்தில் வெளியிட்டதால், ஐரோப்பிய அறிஞர்களின் பாராட்டைப் பெற்றார்; 'ராயல் ஏசியாட்டிக் சொசைட்டி ஆஃப் கிரேட் பிரிட்டன்' என்ற பன்னாட்டு ஆய்வு நிறுவனத்தின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார்.

பன்முகப் பேரறிஞர்:

'நீராரும் கடலுடுத்த..' என்று தொடங்கும் மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும், தமிழர்களுக்கும் அடையாளம் தந்த மாபெரும் படைப்பாகும். தனது 'மனோன்மணீயம்' நாடகத்தின் முகவுரையில், 'பழைமையிலும், இலக்கண நுண்மையிலும், விரிவிலும், ஏனைய சிறப்புகளிலும் எந்த மொழியையும்விடச் சிறந்த பெருமையுடையது செந்தமிழ்.

இன்று பல காரணங்களால் நலிந்து, மாசடைந்து, நிலை தளர்ந்து நிற்கின்ற தமிழைப் போற்ற வேண்டியது தமிழர்களின் தலையாய கடமையன்றோ' என அவர் குறிப்பிட்டிருக்கிறார். நமது முன்னோர்கள் படைத்த - பொருள்சுவையும், சொற்சுவையும் நிறைந்த - நூல்களை அறிமுகம் செய்வது முதன்மையானது என்றும், அந்தந்தக் காலச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு புதிய படைப்புகளை உருவாக்குவது புதிய தலைமுறையின் இரண்டாவது கடமை என்றும் கூறியிருக்கிறார்.

பொதுவாகத் தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள், பிற துறைகளில் - குறிப்பாகக் கல்வெட்டு, செப்பேட்டு ஆய்வுத் துறையில் ஆய்வாளர்களாக அந்தக் காலத்தில் இருக்கவில்லை. அதேபோல், தொல்லியல் துறை வல்லுநர்கள் தமிழ் இலக்கியங்களில் அப்போது ஆர்வம் காட்டவில்லை.

ஆனால், தத்துவத் துறைப் பேராசிரியரான சுந்தரனார், கல்வெட்டு, செப்பேடுகள், தமிழ் இலக்கியம், பக்தி இலக்கியம், வரலாறு, வடமொழி, ஆங்கிலம் போன்ற பல்வேறு துறைகளில் மிளிர்ந்து நின்றார். அதனால்தான், திருஞானசம்பந்தரின் காலம் பொ.ஆ. (கி.பி.) ஏழாம் நூற்றாண்டுக்கு முந்தையது என அவரால் அறுதியிட்டுக் கூற முடிந்தது.

தமிழ் இலக்கியத்தின் தொன்மை:

இந்திய இலக்கியம், மொழி வரலாறுகளில் முன்னோடிகளாக விளங்கிய முனைவர் பர்னெல், கால்டுவெல், நெல்சன் ஆகியோர், பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளின் ஆசிரியரும், சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவருமான திருஞானசம்பந்தரின்

காலம் பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டு என்று தவறாகக் கணித்திருந்தது கவனிக்கத்தக்கது.

பர்னெல் தனது ‘Elements of South-Indian Palaeography’ (1874) என்கிற நூலில், ‘ஏழாம் நூற்றாண்டில் இங்கு வந்த சுவான் சாங் (யுவான் சுவாங்) என்கிற சீனப் பயணி, தமிழர்கள் இலக்கிய ஆர்வம் குறைந்தவர்களாக இருந்தார்கள் என்று தனது கருத்தைப் பதிவுசெய்திருக்கிறார்’ என்று கூறி, அதன் அடிப்படையில் இந்தத் தமிழ் இலக்கியங்கள் எல்லாம் வடமொழி இலக்கியங்களின் தாக்கத்தால் எழுதப்பட்டவை அல்லது அவற்றை முன்மாதிரியாகக் கொண்டு எழுதப்பட்டவை என முடிவுக்கு வந்து, தமிழ் இலக்கியங்களின் தரத்தையும், காலத்தையும் குறைவாக மதிப்பிட்டார்.

அதேபோல், திருக்குறளை ஆய்வுசெய்த கால்டுவெல், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அங்கீகரிக்கப்பட்டது இந்தத் திருக்குறள் என்றும், தமிழ்ச் சங்க காலத்தை அடிப்படையாகக் கொண்டால், அதன் தலைவராகக் கருதப்படும் நக்கீரர் காலமும், கரிகால் சோழனின் ஆட்சிக் காலமும் பொ.ஆ. 3ஆம் நூற்றாண்டு எனக் கணக்கிடலாம் என்றார்.

கால்டுவெல் தனது ‘A Comparative Grammar ofthe Dravidian or South-Indian Family of Languages’ என்ற ஆய்வு நூலில், ‘சில நூற்றாண்டுகளில் தமிழ் நூல்கள் அரங்கேற்றப்பட்டதாகத் தெரியவில்லை. தமிழர்களும் தமிழ்ப் புலவர்களும் இந்து மத அறிஞர்களும் நூல்களின் கருத்துக்களை முதன்மைப்படுத்தித் தங்களை மறைத்துக்கொள்கிறார்கள்’ என்று பதிவு செய்திருக்கிறார்.

அது மட்டுமல்ல, கால்டுவெல் ‘இவர்களுக்கு வரலாற்று நிகழ்வுகளில் ஆர்வமோ, பழமையின் மீது பற்றோ, ஆராய்ச்சிப் பண்போ மிகக் குறைவு. நவீன காலத்தில் இவர்களுக்கு இதுபோன்ற விஷயங்களில் சிறிது ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, நான் தமிழ் இலக்கிய காலம் குறித்த ஆராய்ச்சியில் ஒன்றை மட்டும் உறுதியாகக் கூற முடியும். அதாவது, இந்த நூல்கள் இருந்தன’ என்று அவர் பதிவுசெய்திருக்கிறார்.

சுந்தரனாரின் பதில்:

இதற்குப் பதிலடி தந்த சுந்தரனார், 'தமிழ் இலக்கியங்களை ஆழமாகப் படிக்கும்போது, தனித்துவம் மிகுந்த சிறந்த புலவர்களையும் படைப்பாளிகளையும் பாடல்களையும் ஆங்காங்கு காண முடியும்; அவர்கள் தங்கள் பெயரையும், நிகழ்வுநடந்த இடத்தையும், காலத்தையும் பதிவுசெய்வதில் எந்தத் தயக்கமும் காட்டியதில்லை' என்றார்.

அதற்கு உதாரணமாக சம்பந்தரையே கூறி, அவர் தனது ஒவ்வொரு பதிகத்தின் இறுதிப் பாடலிலும், இறைவனைப் புகழ்ந்து வாழ்த்துவது மட்டுமின்றித் தனது பெயரையும், பதிகம் அருளிய திருத்தலத்தையும் மற்றும் பதிகம் ஓதுவதால் வரும் பயன்களையும், தனிச் சிறப்பினையும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். எனவே, 'இலக்கியங்கள் கால ஆராய்ச்சிக்குப் பயனற்றவை என்ற கருத்தை நான் நம்பவும் இல்லை, அதனுடன் எனக்கு உடன்பாடும் இல்லை' என்று அந்த நூலில் கூறுகிறார்.

'என்னால் சைவ சமய நூல்களை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தர் எந்தக் காலத்தில் வாழ்ந்திருக்க முடியாது என்று உறுதியாகக் கூறத் தகுந்த சான்றுகளைத் தர முடியும். சம்பந்தரின் காலம் குறித்து பல ஐயப்பாடுகளும் குழப்பங்களும் இருப்பதால் சமய நூல்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு கூறுவது கடினம்' என்று கூறி, இதற்காக அவர் தேர்வு செய்தது, 14 சித்தாந்த சாத்திரங்களில், சித்தாந்த அட்டகத்தை அருளியவரும் சந்தானக் குரவர்களில் நான்காமவருமான உமாபதி சிவத்தை. இவர் 'சேக்கிழார் புராணம்', 'திருமுறை கண்ட புராணம்', 'திருத்தொண்டர் புராண சாரம்', 'தில்லை கோயில் புராணம்' உள்ளிட்ட பல நூல்களையும் எழுதியவர்.

ஆதிசங்கரருக்கும் முற்பட்டவர் திருஞானசம்பந்தர்:

வடமொழி இலக்கியமான 'சௌந்தர்ய லகரி' என்னும் நூலில் ஆதிசங்கரர் தனது காலத்துக்கும் முற்பட்ட திருஞானசம்பந்தர் தேவியிடம் ஞானப்பால் உண்ட 'திராவிட சிசு' என்று குறிப்பிடுகிறார். ஆதிசங்கரர் காலம் பொ.ஆ. எட்டாம் நூற்றாண்டு என வரலாற்றுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

எனவே, சம்பந்தரின் காலம் பொ.ஆ. எட்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்று சுந்தரனார் கூறுகிறார். இப்படிப் பல்வேறு சான்றுகளின் அடிப்படையில் திருஞானசம்பந்தரின் காலத்தை நிறுவுவதில் சுந்தரனார் மிகுந்த முனைப்புக் காட்டினார். சுந்தரனாரின் காலத்துக்குப் பிறகு வந்த பல ஆராய்ச்சி முடிவுகளும் இதை உறுதிப்படுத்துகின்றன.

தமிழ் மொழி நலிந்து, மாசடைந்து நின்ற காலத்தில், அதன் தொன்மையையும், சிறப்பையும் எடுத்துக் கூறி 'மனோன்மணீயம்' என்கிற நாடகத்தின் வாயிலாக ஒரு மறுமலர்ச்சிக்கும் வித்திட்டார் சுந்தரனார்.

ஏப்ரல் 4: மனோன்மணீயம் சுந்தரனார் 168ஆவது பிறந்த நாள்

- எஸ்.மோதிலால் நேரு | *பேராசிரியர், சுந்தரனாரின் கொள்ளுப் பேரன்;*
தொடர்புக்கு: mothilal.kau@gmail.com

செந்தமிழுக்கு உழைத்த 'மனோன்மணியம்' சுந்தரனார்!

பி.தயாளன்

https://keetru.com/index.php/2018-01-12-05-57-50/2014-03-08-04-39-26/2014-03-14-11-17-85/26296-2014-04-11-07-10-55

அன்னைத் தமிழுக்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பாங்குற அணி செய்தவர்! நிறை தமிழ்ச் சான்றோராய் நின்று நிலைபெற்றவர்! தமிழக அரசின் நிகழ்ச்சிகள் துவங்கும்போது, "நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழில் ஒழுகும்" என்று தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை இயற்றியவர்! கடின உழைப்பு-விடாமுயற்சி-பிறர்க்கு உதவும் பாங்கு – நன்றி மறவாமை, உண்மையை யாரிடத்தும்

எவ்விடத்தும் துணிந்து கூறி நிலைநிறுத்தும் நேரிய கொள்கை – ஆகிய உயர்ந்த பண்புகளைக் கொண்டவர்! தாய் மொழிப் பற்று, தாய் நாட்டுப்பற்றுடன் நெஞ்சமெலாம் நிறைந்த மனிதப்பற்றாளர்! தத்துவஇயல், மொழிஇயல், வரலாற்றியல், தொல்லியல் ஆகிய பல்துறை அறிஞர்! அவர்தான் பேராசிரியர் மனோன்மணீயம் பெ. சுந்தரனார்.

கேரள மாநிலம் ஆலப்புழைத் துறைமுகப்பட்டினத்தில், பெருமாள்பிள்ளை- மாடத்தி அம்மாள் ஆகியோருக்கு மகனாக 05.04.1855 ஆம் நாள் பிறந்தார்.

சுந்தரனார் ஐந்தாம் வயதில் ஒரு தமிழ்ப் பள்ளியில் பாதம் பதித்தார். பள்ளிக் கல்வியுடன், அவரது தந்தை மூலம் ஔவையாரின் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, நன்னெறி, நீதிநெறி விளக்கம் போன்ற நீதி நூல்களையும், தேவாரம், திருவாசகம் போன்ற பக்தி நூல்களையும், திருக்குறள், நாலடியார் போன்ற அறம் உரைக்கும் நூல்களையும் கற்றுத் தெளிந்தார்! பன்னிரெண்டாம் வயதிலேயே சிறந்த தமிழ்மொழி அறிவு பெற்றவராய் விளங்கினார்.

ஆலப்புழையில் ஓர் ஆங்கிலப் பள்ளியில் பயின்று நன்கு தேர்ச்சியடைந்ததுடன், ஆசிரியர்களின் பாராட்டையும் பெற்றார்.

திருவனந்தபுரம் மாமன்னர் கல்லூரியில் சேர்ந்து உயர்நிலைக் கல்வி கற்று முதல் மாணவராக வெற்றி பெற்றார். இதன் மூலம் அரசின் உதவித் தொகையினை இளங்கலை படிப்புவரை கிடைக்கப் பெற்றார். இளங்கலைப் பட்டப்படிப்பிலும், திருவனந்தபுரத்தில், முதல் மாணவராகத் தேர்ந்தார்!

நாகை நாராயணசாமிப் பிள்ளையிடம் யாப்பருங்கலக்காரிகையைத் தெளிவுபெறக் கற்றார்.

தத்துவத்துறையில் 1880 ஆம் ஆண்டு முதுகலைப் பட்டம் பெற்றார். திருவிதாங்கூர் அரசுப் பணியில் இருந்து கொண்டே சட்டக் கல்வியும் பயின்று முடித்தார்.

தான் பயின்ற திருவனந்தபுரம் மாமன்னர் கல்லூரியிலேயே ஆசிரியராகப் பணியாற்றும் நல்வாய்ப்பைப் பெற்றார். மாணவர்களுக்கு வரலாறும், தத்துவஇயலும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் போதித்தார்.

சிவகாமி என்னும் மங்கையை 1877 ஆம் ஆண்டு மணம்புரிந்தார். சுந்தரனார், ஆராய்ச்சியும் கல்வியும் இரு கண்களாகக் கருதிச் செயல்பட்டார்.

திருநெல்வேலி ஆங்கிலக் கலாசாலைக்குத் தலைவர் ஆனார். அக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். சிறந்த முறையில் பாடங்களைக் கற்பிக்குமாறு ஆசிரியர்களை உற்சாகப்படுத்தினார். ஆங்கில இலக்கியம், தமிழ் இலக்கியம் ஆகியவை பற்றி ஒப்பியல் நெறியில் உரை நிகழ்த்தினார்.

திருவனந்தபுரம் மாமன்னர் கல்லூரியில் மீண்டும் 1879 ஆம் ஆண்டு தத்துவத்துறைப் பேராசிரியராகப் பணியேற்றார். இவர் திறமையை அறிந்த மாமன்னர் தன் அரண்மனையிலேயே, 'பிறவகை சிரஸ்ததார்' எனும் உயர்பதவியை வழங்கினார்.

சுந்தரனார்யின் ஆராய்ச்சிகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது திராவிட இன ஆராய்ச்சியாகும். தென்னாட்டில் திராவிட இன உணர்வுக்கு வித்திட்டவர் என்று திராவிடவியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பழந்தமிழ் இலக்கியங்களையும், தத்துவ நூல்களையும் ஆராய்ந்தவர் பேராசிரியர் சுந்தரனார். அவர் மொழிப்பற்றுடன் நாட்டுப்பற்றையும் வளர்த்தார்.

மனோன்மணியம் என்னும் நாடகத்தை 1891 ஆம் ஆண்டு படைத்தார். 'அது ஒரு பொழுதுபோக்கு நாடகமல்ல; வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு உரிய தத்துவக் கருவூலமாக மிளிர்கிறது'- என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

'மனோன்மணியம்' என்ற நாடகத்தினைப் படைத்ததால் 'மனோன்மணியம் சுந்தரனார்' என்று அனைவராலும் அழைக்கப்பட்டார். இந்நாடகம் சேலம் மாடர்ன் தியேட்டர் அதிபர் டி.ஆர். சுந்தரம் அவர்களால் 'மனோன்மணி' என்ற பெயரில் திரைப்படமாக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

திருவனந்தபுரம் பூர்வீக அரசியல் வரலாறுகளைப் பற்றி நன்றாக ஆராய்ந்து 'திருவிதாங்கூர் பண்டை மன்னர்கள் வரலாறு' என்ற ஆய்வு நூலை எழுதி வெளியிட்டார்.

அந்த நூல் அந்நாட்டு வரலாற்றை உரைக்கும், இன்றியமையாத ஆதாரங்களுள் ஒன்றாக இன்றும் விளங்குகிறது. இந்நூலின் பொருட்டு, திருவிதாங்கூர் மாமன்னர், இவர் குடும்பத்தினர் திங்கள்தோறும், ஒரு நன்கொடை தொகையை பரம்பரையாகப் பெற்றுவர ஆணையிட்டார்.

திருவிதாங்கூர் அரசு 1896 ஆம் ஆண்டு கல்வெட்டுத்துறையைத் தொடங்கியது. பேராசியர் சுந்தரனார், அரசுக் கல்வெட்டுத் துறையின் 'மதிப்புறு தொல்லியல் ஆய்வாளராக' நியமிக்கப்பட்டார். அவர் திருவிதாங்கூரின் பல பகுதிகளிலும் கிடைத்த கல்வெட்டுக்களைப் பற்றி பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டார்.

புரவசேரி ஆழ்வார் கோயில், சோழபுரம் சோழராஜாகோயில், திருவட்டாறு ஆதிகேசவப்பெருமாள் கோயில், திருவல்லம் பரசுராமர் கோயில் உட்பட பல்வேறு கோயில்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்களை அவர் தேடிக் கண்டுபிடித்து அவை தரும் தகவல்களை வெளியிட்டார். கல்வெட்டுத் துறையில் சுந்தரனார் முன்னோடியாக விளங்கினார் என்று வரலாற்று அறிஞர் கே.கே. பிள்ளை தமது 'சுசீந்திரம் கோயில்' என்ற ஆய்வுநூலில் குறிப்பிட்டுள்ளார்.

இவரின் தொல்லியல் ஆய்வுத் திறனைப் பாராட்டி, இவரை இங்கிலாந்தில் உள்ள 'ராயல் ஏஷியாடிக் கழகம்' தங்கள் நிறுவனத்தின் உறுப்பினராக்கிப் பெருமைப்படுத்தியது. பிறகு, லண்டன் வரலாற்று

ஆராய்ச்சிக் கழகம் F.R.H.S. என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. தென்னிந்திய வரலாற்றில் இவர் செய்த சாதனைகளைப் பாராட்டி அன்றைய ஆங்கிலேய அரசு 'ராவ்பகதூர்' என்ற பட்டத்தை வழங்கியது. ஜெர்மன் நாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்று 1896 ஆம் ஆண்டு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

சென்னைப் பல்கலைக்கழகம் இவரை, 'உயர்கலைக் கழக உறுப்பினர்' பொறுப்பில் நியமித்தது. தமிழ், ஆங்கிலம், வரலாறு, தத்துவம் ஆகிய துறைப் பாடங்களின் தேர்வு நிலை உறுப்பினராகவும் விளங்கினார்.

பேராசிரியர் பெ.சுந்தரனார் இயற்றிய மனோன்மணியம் நாடகக் காப்பியத்திலுள்ள தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல்தான், தமிழக அரசு விழாக்களில் பாடப்பெற வேண்டும் என்று தமிழக முதல்வர் மு. கருணாநிதி 1970 ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருவனந்தபுரத்தில் 'சைவப் பிரகாச சபை' என்ற சபையை சுந்தரனார் 1885 ஆம் ஆண்டு தோற்றுவித்தார். தமிழ்மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றைப் போற்றி வளர்த்தல் – தமிழ்ச் சமுதாயப் பழக்க வழக்கங்களைச் சீர்திருத்துதல்- தமிழ் மக்களின் பொருளாதார நிலையை மேன்மையுறச் செய்தல்-தமிழ்ச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல்-தமிழ் மக்களின் உயர்தரக் கல்வி, தொழிற் கல்வி ஆகியவற்றிற்குரிய வசதிகள் அளித்தல் ஆகிய சீரிய நோக்கங்களுடன் சபையை நிர்வகித்தார். மேலும் இச்சபையின் மூலம் தமிழ்ப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. சபையின் சார்பில் கேரளப் பல்கலைக் கழகத்தில், "பேராசிரியர் சுந்தரனார் அறக்கட்டளை" நிறுவப்பட்டுள்ளது.

வீரத்துறவி விவேகானந்தர் 1892 ஆம் ஆண்டு ஆன்மீகப் பயணமாக திருவனந்தபுரம் வந்திருந்தார். அப்போது, சுந்தரனார்யின் விருந்தினராக அவர் இல்லம் வந்தார். விருந்திற்குப் பின்பு விவேகானந்தரும், சுந்தரனார்யும் உரையாடிக் கொண்டிருந்தபோது, எதிர்பாராத வகையில், விவேகானந்தர், சுந்தரனார்யைப் பார்த்து,

‘தங்கள் கோத்திரம் என்ன’? என்று கேட்டார். சுந்தரனார் ஒரு நிமிடம் மௌனமானார். பின் நிகழ்ந்தவற்றைத் தன் குறிப்புப் புத்தகத்தில் இவ்வாறு குறித்துள்ளார்: “உவப்போடு என்னுடன் பேசி மகிழும் உத்தம நண்பர் விவேகானந்தர், ‘தங்கள் கோத்திரம் என்ன?’ என்று வினா எழுப்பினார். வேறு ஒரு தினமாகில் வினாவினைக் கேட்ட நான் வெகுண்டிருப்பேன். உறவென விருந்துக்கு வந்த, அந்த உயர்ந்த நண்பரிடம் நான் மெல்லிய குரலில், ‘எனக்கும் கோத்திரத்திற்கும் சம்பந்தம் ஒன்றும் கிடையாது- தன்மானம் காக்கும் தென்னாட்டில் பிறந்த திராவிட இனத்தைச் சேர்ந்தவன்’ என ஆத்திரமின்றிக் கோத்திரக் கேள்விக்கு விடையளித்தேன்” என்பதே அக்குறிப்பு!

பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரனார், ‘மனோன்மணியம்’, ‘நூற்றொகை விளக்கம்’, ‘தமிழ் இலக்கிய வரலாற்றில் சில மைல் கற்கள்’, ‘பண்டைய திருவிதாகூர் முடிமன்னர்களின் காலம்’ ஆகிய நூல்களையும், ‘சிவகாமி சரிதம்’, ‘ஒரு நற்றாயின் புலம்பல்’, ‘பொதுப் பள்ளியெழுச்சி’, ‘அன்பின் அகநிலை’ ஆகிய கவிதை நூல்களையும், ‘ஜீவராசிகளின் இலக்கணம்’, ‘மரங்களின் வளர்ச்சி’, ‘புஷ்பங்களும் அவற்றின் தொழில்களும்’ ஆகிய உரைநடை நூல்களையும், ‘உரை நடை மடல்,’ ‘கவிதை மடல்’ ஆகிய மடல் நூல்களையும், ஐந்து ஆங்கில நூல்களையும் படைத்து தமிழுலகுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

பேராசிரியர் சுந்தரனார் 26.04.1897 ஆம் நாள் இளமை முதிராத தன் நாற்பத்திரெண்டாவது வயதில் இயற்கை எய்தினார். அன்றே – ‘தமிழ் உலகம்’, தன் தலைமகனை இழந்ததாய்க் கண்ணீர் விட்டுக் கதறி அழுதது. தென்னகத்தின் முக்கடலும், கண்ணீர் சூழ உப்புக் கடலாய் உருமாறி ஓலமிட்டது.

இலக்கியத் திறனாய்வாளர் கலாநிதி க. கைலாசபதி, ‘அவர், ‘பொதுமறையாம் திருக்குறளோடு ‘மனுநீதி சாத்திரத்தை’ ஒப்பிட்டும், ‘திருவாசகத் தேனோடு’, ‘வேதத்தை ஒப்பிட்டும்’ தீந் தமிழின் உயர்வு பேசுகிறார்’ என்று கருத்துரைத்துள்ளார்!

பாவேந்தர் பாரதிதாசன், சுந்தரனார்யின் புகழைத் தன் கவிதை நூலில் ‘தேனருவி’ யாய் இப்படிக் கொட்டிப் பாடியுள்ளார்.

“நான் பெற்ற மக்களின் சுந்தரன் சிறந்தவன்!

நற்றமிழ் காக்கத் தன்னலம் துறந்தவன்!

தேன்போன்று தமிழை வளர்க்கப் பிறந்தவன்!

செந்தமிழுக்கு உழைத்தே இறந்தவன்!”

பேராசிரியர் பெயரில், நெல்லையில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் 1989 ஆம் ஆண்டு தமிழக அரசால் தொடங்கப்பட்டு நடந்துவருகிறது.

தத்துவப் பேராசிரியராக- கல்லூரி முதல்வராக – வரலாற்று ஆராய்ச்சி அறிஞராக–கல்விக் கடலாகத் திகழ்ந்தவர்! அமிழ்தினும் இனிய தமிழ்மொழிக்குத் தொண்டாற்றியவர். தமிழ் மொழி உள்ளவரை, மனோன்மணியம் சுதந்திரனார்யின் பெயரும் நின்று நிலைத்திருக்கும் !

மனோன்மணியம் சுந்தரனார் அவர்களின் உருவம் பொறித்த ‘அஞ்சல் தலை’யும், ‘நாணயமும்’ நடுவரணரசு வெளியிட வேண்டும் என்பது நானிலமெங்கும் வாழும் தமிழர்களின் விருப்பமாகும்.

- பி.தயாளன் (dhayalandybdo1964@gmail.com)

மனோன்மணியம் பெ.சுந்தரனார் அவர்களின் அரிய பணிகள்

பூ.கொ.சரவணன்

https://saravananagathan.wordpress.com/2018/12/02/%E0%AE%AE%E0%AE%A9%E0%AF%8B%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AE%E0%AF%8D-%E0%AE%AA%E0%AF%86-

%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B0%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0/

தமிழ்த்தாய் வாழ்த்தை இயற்றிய மனோன்மணியம் பெ.சுந்தரனாரின் (சுருக்கமாகப் பெ.சு,) அறிவுலகப் பணிகள் குறித்து, ஆய்வாளர் அ.கா.பெருமாள் அவர்கள் 'மனோன்மணியம் சுந்தரனாரின் இன்னொரு பக்கம்' என்கிற குறுநூலை எழுதியுள்ளார். நாற்பத்தி இரண்டு ஆண்டுகளே வாழ்ந்த பெ.சு நாடகாசிரியர், ஆய்வாளர், உரைநடை எழுத்தாளர் என்கிற பல்வேறு பரிமாணங்கள் கொண்டவர். அவர் மொத்தமாக ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதியவை 650 பக்கங்களில் அடங்கிவிடும். ஆனால், தமிழ் இலக்கிய வரலாற்றின் கால ஆராய்ச்சி, கல்வெட்டு ஆய்வு ஆகியவற்றுக்கு வித்திட்டவர் என்கிற சிறப்புக்கு உரியவர்.

தன்னுடைய மனோன்மணியம் நாடக நூலில் தன்னை, 'அடியேன் கடையேன்; அறியாத சிறியேன்; கொடுமலையாளக் குடியிருப்பு உடையேன்' என்று அடக்கமாக அறிமுகப்படுத்திக் கொள்கிறார். அன்றைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் வாழ்த்த பெ.சு. தன்னுடைய தமிழார்வத்தால் திருவனந்தபுரத்தில் இருந்து மாட்டுவண்டி ஏறி செங்கோட்டை அடைந்து அங்கிருந்து சென்னை வரை பயணம் செய்து தமிழறிஞர்களைக் கண்டு, அறிவுப்பசி ஆற்றிக்கொண்டார். அன்றைய சமஸ்தான மன்னரின் உதவியோடு லண்டனில் இருந்து ஆங்கில நூல்களை வரவைத்து வாசித்து இருக்கிறார்.

களக்காட்டில் இருந்து ஆலப்புழைக்குக் குடிபெயர்ந்த வேளாளர் குடும்பம் என்றாலும் தமிழையும், சைவத்தையும் பெ.சுவின் குடும்பம் மறக்கவில்லை. திருவிதாங்கூர் அரசர்களின் மொழி வெறுப்பற்ற தன்மை இதற்குக் காரணம் என்று ஆதாரங்களோடு கவனப்படுத்துகிறார் அ.கா.பெருமாள். பெ.சு வரலாறு, தத்துவம் பயின்றார். தத்துவத்தில் 1880-ல் முதுகலை பட்டம் பெற்றார். சட்டம் பயின்றாலும் அப்படிப்பை அவர் முடிக்கவில்லை. பெ.சு. அவர்கள் திருநெல்வேலி ம.தி.தா. இந்துப்பள்ளியின் தலைமைப்பொறுப்பில் இருந்த போது தமிழை முறையாகக் கற்றதோடு, ஸ்ரீ கோடகநல்லூர் சுவாமிகளிடம் சித்தாந்த சாத்திரங்களைக் கற்றுத்தேர்ந்ததோடு தானே

சுயமாகத் தமிழ் இலக்கியங்களைப் படித்துள்ளார். திருவனந்தபுரம் கல்லூரியில் பயின்ற போது தமிழ்த்துறைக்குப் புத்தகங்களை வாங்கியுள்ளார்.

திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியின் தத்துவத்துறை பேராசிரியராக இருந்த முனைவர் ராபர்ட் ஹார்வி இங்கிலாந்து போக வேண்டி இருந்த போது தன்னுடைய இடத்திற்குப் பெ.சுவை பரிந்துரை செய்தார். 1878-1882 வரை தத்துவ ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். பின்னர் மூன்றாண்டுகள் சமஸ்தான மன்னரால் பிறவகைச் சிரஸ்தார் என்னும் பொறுப்பில் நியமிக்கப்பட்டார். இது அரசு நிர்வாகம் தொடர்புடையது. இப்பணி காலத்தில் தான் பல்வேறு கோவில்களுக்குப் பயணம் செய்து, கல்வெட்டுகள், ஆவணங்களைப் பெ.சு. ஆய்வு செய்துள்ளார். 1885-1897 வரை ஹார்வியின் பரிந்துரையால் மகாராஜா கல்லூரி பேராசிரியராகப் பணியாற்றினார். நன்றி மறவாமல் தன்னுடைய வீட்டிற்கு ஹார்விபுரம் என்று பெயரிட்டதோடு, தன்னுடைய மனோன்மணியம் நாடகத்தை அவருக்கே சமர்ப்பித்தார்.

நாடகாசிரியர்:

பத்தொன்பதாம் நூற்றாண்டில் புராணங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு தமிழ் நாடகங்கள் எழுந்தன. தமிழகத்தில் அக்காலத்தில் 327 நாடகங்கள் வெளிவந்ததாக ஒரு ஆய்வுக்குறிப்புண்டு. பெ.சு இத்தகைய நாடகங்களைப் படித்துள்ளார். லிட்டன் பிரபு எழுதிய ரகசிய வழி கதையின் தழுவலாகத் தன்னுடைய மனோன்மணியம் நாடகத்தைப் பெ.சு எழுதினார். பெ.சுவின் நாடகம் எளிமை, விறுவிறுப்பு, அமைப்பிற்காகப் பரவலாகப் படிக்கப்பட்டது. இந்நாடகத்தை அரங்கேற்றும் நோக்கத்தோடு பெ.சு எழுதவில்லை, வாசிப்பின்பத்திற்காகவே அதனை இயற்றியதாக அவரே குறிப்பிட்டுள்ளார்.

வெண்பா, கலிப்பா, குறள் வெண்செந்துறை, வஞ்சிப்பா என்று பல்வேறு பாவினங்கள் விரவிவர இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இந்நூலை தத்துவப் பின்னணியோடு பெ.சு படைத்தார். ‘இல்லறம்,

துறவறம், பக்தி ஞானம் முதலிய மோட்ச சாதனங்கள்' பாத்திரங்களின் மூலம் உருவகப்படுத்தி இந்நாடகம் அமைந்தது.



இந்நாடகத்தில் திருக்குறள் பல்வேறு இடங்களில் மேற்கோள் காட்டப்படுகிறது. 'வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்கு உணர்ந்தோர்கள் உள்ளுவரோ மநுவாதி ஒருகுலத்துக்கு ஒருநீதி' என்கிற வரி நூலில் இடம்பெறுகிறது. 'பத்துப்பாட்டில் மனம் பற்றியவர் பிற நூற்களைப் பற்றமாட்டார்' என்று பெ.சு சிலிர்க்கிறார். மனோன்மணியம் நாடகம் பல்வேறு பல்கலைகழகங்களில் பாடநூலாக வைக்கப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட பதிப்புகளைக் கண்ட சிறப்புக்கு உரியது.

ஆய்வறிஞர்:

கரைக்கோட்டை, ஒழுகினசேரி சோழபுரத்தில் உள்ள சோழீஸ்வரன் கோவில் கல்வெட்டுகள் என்று பலவற்றைப் பெ.சு. படியெடுத்து உள்ளார். ஆங்கிலத்தில் பத்துப்பாட்டு, திருவிதாங்கூரின் ஆரம்பகால வரலாறு, ஞானசம்பந்தர் காலம், உதிரியான சில கல்வெட்டுகள், நம்பியாண்டார் நம்பியின் காலம் முதலிய கட்டுரைகளை எழுதினார். பத்துப்பாட்டின் திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி ஆகிய மூன்று நூல்களையும் பெ.சு மொழிபெயர்த்துள்ளார்.

திருவிதாங்கூர் வரலாறு கட்டுரையில் கொல்லம் ஆண்டு என்கிற வழக்கம் எப்படி வந்தது என்பதைக் கல்வெட்டுகளைக் கொண்டு ஆய்வு செய்து புதியதொரு பார்வையை முன்வைக்கிறார். அக்கட்டுரையில் சமூக நோக்கோடும் பெ.சு எழுதியுள்ளார். திருவிதாங்கூர் வரலாற்றில் ஆரியப்பண்பாடும், ஆரியருக்கு முந்தைய திராவிடப்பண்பாடும் இணைந்தே உள்ளன என்கிற பெ.சு கன்னியாகுமரி முதல் பறவூர் வரை பயணிக்கும் ஒருவன் பழம் திராவிட மரபைக் காணமுடியும் என்கிறார். திருவிதாங்கூர் பகுதியின் வேணாட்டு மன்னர்களின் காலத்தைப் பெருமளவில் துல்லியமாக முதலில் கணித்தவர் பெ.சு. சம்பந்தர் காலம் கட்டுரையில் அவரின் காலத்தைச் சமூகச்சூழல், சமூக வரலாறு, அரசியல் வரலாறு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பெ.சு கண்டறிந்துள்ளார். ஆதி சங்கரரின் நூல்கள், மத்தவிலாச பிரகசனம் ஆகியவற்றைக்கொண்டு சம்பந்தர் காலம் ஏழாம் நூற்றாண்டு என்று நிறுவுகிறார். ராஜராஜன் காலமே நம்பியாண்டார் நம்பி காலம் என்றும் வாதிடுகிறார்.

ராமாயணத்தின் சாதி குறித்துக் கூர்ந்து நோக்கிய பெ.சு. அது குறித்து வெ.சு. முதலியாரிடம் பேசினார். அதைக்குறித்து எழுதவுள்ளதாகச் சொன்னாலும் அதற்குள் அமரரானார். ஆகவே, பெ.சுவின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு வான்மீகி ராமாயணம் குறித்துக் கட்டுரை வரைந்தார் வெ.சு.முதலியார். ‘அதில் ராமாயணம் ஆரியச்சார்புடையது. ஆரியர் என்பவர் தமிழ் பிராமணர், வட இந்திய சாதியர் சிலரைக் குறிக்கும் சொல். ஆரியர் அல்லாத அநாரியர்

தென்னிந்தியக் குடிகள் ஆவர்.' என்றதோடு, 'பெண்ணைச் சிறைப்பிடித்தும் ராவணன் கொல்லவில்லை, திராவிடப்பெண்ணான சூர்ப்பநகையை லட்சுமணன் துரோகம் செய்தவன். விபீஷணன் என்ற திராவிடன் துரோகம் செய்தவன்; அதற்காக ஆழ்வார் பட்டம் பெற்றவன். ஆரியர்கள் திராவிடர்களை இழிவானவர்கள் எனச் சொல்லி நம்பும்படி ஆக்கிவிட்டார்கள்' என்றும் குறிப்பிட்டார்.

உரைநடையாசிரியர்:

உரைநடையில், 'சாத்திர சங்கிரகம் என்னும் நூற்றொகை விளக்கம்' என்கிற ஒரே நூலை எழுதினார். இந்நூலில் கலைச்சொல்லாக்கம் உண்டு. இதைக்குறித்துப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, 'தமிழ்ச்சுடர்மணிகள்' நூலில். '....சுந்தரம்பிள்ளை தன் நூலில் தமிழ் மொழிபெயர்ப்புச் சொற்களைத் தந்திருக்கிறார். வடசொற்களை விலக்கும் கருத்தே இவரிடம் கிடையாது. தமிழின் வளர்ச்சிக்கும், தமிழ் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் வேண்டுவன செய்தவர்களில் சுந்தரம் பிள்ளை தலைசிறந்தவர்' என்று புகழாரம் சூட்டுகிறார்.

கவிஞர்,கட்டுரையாசிரியர்:

பெ.சு. ஒரு நற்றாயின் புலம்பல், பொதுப்பள்ளி எழுச்சி, அன்பின் அகநிலை முதலிய பல்வேறு கவிதைகளையும் இயற்றியுள்ளார். ஒரு நற்றாயின் புலம்பல் மணமாக வேண்டிய தினத்தன்று இறந்து போன மகள் குறித்து அரற்றும் அன்னையின் அழுகுரல். பொதுப்பள்ளி எழுச்சி தத்துவ நோக்கோடு அறியாமைத் துயிலில் இருந்து எழுப்பிய இறைவனை நோக்கி பாடப்பட்டது. அன்பின் அகநிலை விவிலியத்தின் புனித பவுல் கருத்துகள் அடிப்படையில் எழுதப்பட்டவை. சீவராசிகளின் இலக்கணமும், பிரிவும், மரங்களின் வளர்ச்சி, புஷ்பங்களும் அவற்றின் தொழிலும் முதலிய மூன்று அறிவியல் கட்டுரைகளையும் பெ.சு எழுதியுள்ளார். ஆங்கிலத்தில் 'Hobbes, the father of English ethics'. 'Bentham, The Juristic Moralist', 'A scene from A Tamil play', H.T.Wills முதலிய கட்டுரைகள் எழுதினார்.

தன்னுடைய மனோன்மணியம் நாடகத்தின் துவக்கத்தில்’தமிழ் மொழியின் இலக்கியங்களை அழியாமல் பாதுகாத்த திருச் சி.வை.தாமதோரன் பிள்ளை, உ.வே.சாமிநாத அய்யர் ஆகிய இருவரையும் வணங்குகிறேன். கல்வி, கேள்வி, அறிவு முதலியவற்றால் சிறியவனாகிய நான் மனோன்மணியம் என்னும் நாடகத்தைப் படித்திருக்கிறேன்.’ என்று தன்னடக்கத்தோடு குறிப்பிடுகிறார். உ.வே.சா மனோன்மணியத்தைப் பற்றி மாணவர்களுக்கு அறிமுகப்படுத்திவிட்டு அப்படைப்பில் குறைகள் உண்டு என்றதை பெ.சு அறிந்தார். கடிதம் எழுதி குறைகளை அறிந்து கொண்டு அவற்றைத் தீர்க்கவும் செய்தார். மேலும், திருவிதாங்கூர் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்ற வருமாறு உ.வே.சாவிற்கு அன்போடு அழைப்பு விடுத்தார்.

தமிழக அரசு அவரின் தமிழ்த்தெய்வ வாழ்த்தை தமிழ்த்தாய் வாழ்த்தாக ஆக்கியது. அவரின் மூலப்பாடலில், ‘ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன் சீரிளமை’ என்கிற வரி வடமொழி வெறி நிலவிவந்த காலத்தில் எதிர்க்குரலாக ஒலித்துள்ளது. மொழிவாரி மாநிலங்கள் உருவான போது, நாஞ்சில்நாடு தமிழர்க்கு உரியது என்று தன்னுடைய மனோன்மணியம் நூலில் பெ.சுந்தரனார் குறிப்பிட்டு இருந்தது கவிமணி, ஜீவா, ம.பொ.சிவஞானம் ஆகியோரால் மேற்கோள் காட்டப்பட்டு இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைக்கப்படுவது உறுதி செய்யப்பட்டது.

நாற்பத்தி இரண்டு வயதில் நோய்வாய்ப்பட்டு இறந்து போன பெ.சுந்தரனாருக்கு அஞ்சலியாக அவர் உ.வே.சாவுக்கு எழுதிய கடிதத்தின் இறுதி வரிகளே அமையக்கூடும்: ‘நம்மனையார் தேகநிலையைக் கருதும்போது இருதலைக்கொள்ளியினுள் எறும்பு என்றே உண்மையாய் எண்ண வேண்டியதாக இருக்கிறது. உழைத்தால் சரீர உபாதை துணிபாக நிற்கிறது. உழைக்காவிட்டால் சரீரமிருந்து என்ன பயனென்ற சோகமும் அப்படியே ஏது செய்ய? கடவுள் இச்சைபோல நடக்கட்டும்’

மிக முக்கியமான ஆளுமையின் பன்முகத்தன்மையை அற்புதமாக அறிமுகப்படுத்துகிறது

அறிஞர் அ.கா.பெருமாளின் இக்குறுநூல்.

தமிழ்த்தாய் வாழ்த்து ‘மாநிலப் பாடலான்’ வரலாறு.


பூ.கொ.சரவணன்

https://saravananagathan.wordpress.com/2021/12/22/short-history-of-tamil-thaai-vazhthu/

‘நீராருங் கடலுடுத்த...’ பாடல் பெ.சுந்தரனார் இயற்றிய ‘மனோன்மணீயம்’ எனும் நாடகத்தின் பாயிரத்தில் உள்ளது . பெ.சுந்தரனார் தத்துவப் பேராசிரியர், ஆய்வாளர். கால்டுவெல் 9-ம் நூற்றாண்டுக்கு முன் தமிழில் நூல்கள் இருந்ததில்லை என்று கருத்துரைத்தார். அதனை மறுதலித்து ஞானசம்பந்தர் காலம் 7-ம் நூற்றாண்டு என நிறுவியவர் சுந்தரனார். தன்னுடைய ‘மனோன்மணீயம்’ நாடக நூலிற்கு ஆங்கிலம், தமிழ் என்று இரு மொழிகளிலும் முன்னுரை எழுதியுள்ளார்.



தன்னுடைய முகவுரையில். "பழமையிலும் இலக்கண நுண்மையிலும் இலக்கிய விரிவிலும் ஏனைய சிறப்புக்களிலும் மற்ற கண்டங்களிலுள்ள எப்பாஷைக்கும் தமிழ்மொழி சிறிதும் தலைகவிழ்க்கும் தன்மையதன்று. இவ்வண்ணம் எவ்விதத்திலும் பெருமைசான்ற இத்தமிழ்மொழி பற்பல காரணச் செறிவால், சில காலமாக நன்கு பாராட்டிப் பயில்வார் தொகை சுருங்க, மாசடைந்து நிலைதளர்ந்து, நேற்று உதித்த தெலுங்கு முதலிய பாஷைகளுக்கும் சமமோ தாழ்வோ என்று அறியாதார் பலரும் ஐயமுறும்படி அபிவிருத்தியற்று நிற்கின்றது" என்று வருந்துகிறார்.



ஓவியம்: மணியம் செல்வன்/ நன்றி: இந்து தமிழ் திசை

பாயிரத்தில் 'தமிழ் தெய்வ வணக்கம்' என்று தமிழை தெய்வமாக போற்றிப் பரவுகிறார். கால்டுவெல் திராவிட மொழிகளில் தமிழ் மூத்த மொழி எனக் கருத, தமிழ்த்தெய்வ வணக்கத்தில் தமிழே மற்ற திராவிட மொழிகளுக்குத் தாய் என்று சுந்தரனார் எழுதினார். மேலும், தமிழைத் தாய், அணங்கு என்று பலவாறு போற்றுகிறார். இப்பாடலில் வழங்கி வரும் முதன்மையான கருத்துகள் என்று சிலவற்றைப் பேராசிரியர் கைலாசபதி அடையாளப்படுத்துகிறார். அவை,

(அ) இந்திய நாட்டில் தெக்கணம் திலகமாகத் திகழும் பகுதி.
(ஆ) திராவிடம் முதன்மையான சிறப்புமிக்கதாகும்
(இ) தமிழ் உலகமெங்கும் மணக்கும் புகழும், பெருமையும் மிக்கது
(ஈ) எல்லையற்ற, சிதையாத பரம்பொருளை போன்றது தமிழ்
(உ) தமிழே திராவிட மொழிகளுக்கு தாய்
(ஊ) ஆரியம் போல் வழக்கழியாமல் சீரிளமை மிக்க மொழியாகத் தமிழ் திகழ்கிறது

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர் எல்லையரு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல் கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமும்துளுவும் உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும் ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே."

'நீராருங் கடலுடுத்த' எனும் துவங்கும் இப்பாடல் முந்தைய தமிழ் படைப்புகளில் இருந்து பல வகைகளில் வேறுபட்டது . நாடகத்துறையில் மட்டுமன்றி தமிழ்ச்சமூக, பண்பாட்டுத் தளங்களில் புதிய பாய்ச்சலுக்கு அடிகோலியது. பேராசிரியர் டேவிட் ஷூல்மானின் பார்வையில் தமிழ்த்தேசியத்திற்கான முன்னோடிப்

பார்வை இப்பாடலில் காணக்கிடைக்கிறது. ஆய்வாளர் பிரேர்னா சிங் இப்பாடல் துணைத்தேசியமும், தமிழர் நலனும் கைகோர்க்கும் இடம் என்கிறார். தமிழ்த்தாயின் உலகத்தில் "சாதி, சமய, பாலினப்பாகுபாடுகள் கிடையாது. கற்றலும், கலையும், பண்பாடும் தழைத்தோங்கின" என்று சுட்டிக்காட்டுகிறார் வரலாற்றாளர் சுமதி ராமஸ்வாமி . திருக்குறள் இருக்கக் குலத்திற்கொரு நீதி சொல்லும் மனுநீதி எதற்கு என்றும் அவ்வணக்கத்தில் சுந்தரனார் கேட்கிறார். திருவாசகத்துக்கு உருகாமல் ஆரவாரமிக்கப் பிற மந்திரச்சடங்கில் உருகுவரோ என்றும் தமிழ்த்தெய்வ வணக்கத்தில் கேட்கிறார். இது ஆரிய வேதங்களைக் குறிக்கிறது என்கிறார் வரலாற்றாசிரியர் சுமதி ராமஸ்வாமி.

அவ்வரிகள்,

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன்- குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி யொருகுலத்துக்- கொருநீதி
மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தில்- மாண்டோர்கள்
கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ."


இப்பாடலுக்கு பிறகே தமிழைத் தாயாக, தெய்வமாக போற்றிப்பரவுவது பரவலானது. மேலும், தமிழ்த்தாய் தமிழ் மக்களின் அன்னையாக போற்றப்படுகிறார். இருபதாம் நூற்றாண்டில் எண்ணற்ற பாடல்கள் தமிழன்னையை போற்றி பா டப்பட்டன. இவற்றுக்கான முதல் வித்து 'தமிழ்த்தெய்வ வணக்கம்' ஆகும்.



நன்றி: கரந்தைத் தமிழ்ச்சங்க கல்லூரி முகநூல் பக்கம்

கரந்தைத் தமிழ்ச்சங்கம் தன்னுடைய மூன்றாம் ஆண்டறிக்கையை 1913-ல் வெளியிட்டது. அதில் 'நீராருங் கடலுடுத்த ....' பாடலைப் பற்றி பேசுகிறது:

'பழைய தமிழ் நூற்களைப் பரிசோதித்துப் பிரசுரித்து அவைகளை இறந்துபடாது காத்தலும், ஆங்கிலமாகிய பாஷைகளிலுள்ள பற்பல சாத்திர நூற்களைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொள்ளலும், பின்னும் நம் தமிழ்ச் சகோதரர்களுக்கு ஏற்றன நாடி எழுதி வெளியிடுதலும் யாம் கொண்ட நோக்கங்களுள் மிக முக்கியமானவாயினும், ஊதியக் குறைவால் இத்துணையும் யாம் இவ்வழியில் நெடிது சென்றிலம். எனினும், தமிழவள் கமழ் மொழி என்றோர் வரிசைப் பிரசுரம் தொடங்கி, அவ்வரிசையில் முதன் முதலாகத் திருவனந்தபுரம் காலஞ்சென்ற கனம் சுந்தரம் பிள்ளையவர்கள், எம். ஏ., எழுதியுதவியதூஉம், கல்லையும் உருக்கவல்லதூஉமாகிய அருமைத் தமிழ் தெய்வ வணக்கத்தினை அச்சிட்டு வெளியிட்டோம்.' என்று ஆண்டறிக்கை குறிப்பிடுவதை ஆய்வாளர் கரந்தை ஜெயராஜ் கவனப்படுத்துகிறார்.


7

129 பிரதிகள் உதவப்பெற்றன. இவ்வன்பர்களுக்கு யாம் என்றும் மறவாநன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சங்கப்பிரசுரம்.

பழைய தமிழ் நூற்களைப் பரிசோதித்துப் பிரசுரித்து அவைகளை இறந்துபடாது காத்தலும், ஆங்கிலமாதிய பாஷைகளிலுள்ள பற்பல சாத்திர நூற்களைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொள்ளலும், பின்னும் நம் தமிழ்ச் சகோதரர்களுக்கு ஏற்றன நாடி எழுதி வெளியிடுதலும் யாம் கொண்ட நோக்கங்களுள் மிகமுக்கியமானவாயினும் ஊதியக்குறைவால் இத்துணையும் யாம் இவ்வழியில் நெடிது சென்றிலம். எனினும் "தமிழவள் கமழ் மொழி" என்றோர் வரிசைப் பிரசுரம் தொடங்கி அவ்வரிசையில் முதன் முதலாக திருவனந்தபுரம் காலஞ்சென்ற கனம் சுந்தரம்பிள்ளையவர்கள் M. A. எழுதியுதவியதூஉம், கல்லையும் உருக்கவல்லதூஉமாகிய அருமைத் தமிழ்த் தெய்வவணக்கத்தினை அச்சிட்டு வெளியிட்டோம். பின்னர் இரண்டாவதாக [illegible] சங்கத்து இரண்டாவது ஆண்டுநிறைவு விழாவில் [illegible] பிரசங்கங்களை [illegible] வரையப்பட்ட தமிழ்த் தெய்வவணக்கச் செய்யுட்களோடு சேர்த்துப் புத்தக ரூபமாக அச்சிட்டு வெளியிடுகிறோம்.

1913-ம் ஆண்டறிக்கை

இப்பாடல் படிகளை கரந்தை தமிழ்ச்சங்கத்தை சேர்ந்த உமாமகேசுவரனார் பல நூறு பிரதிகள் அச்சிட்டு கொண்டு சேர்த்தார்.

இப்பாடல், பட்டி தொட்டியெங்கும் பாடப்பட்டது. பல்வேறு தமிழ்ச்சங்க கூட்டங்களில் இப்பாடல் ஒலித்தது. தனித்தமிழ் மாநாடுகளில் தவறாமல் இடம்பெற்றது. .தனித்தமிழ் மாநாடுகள், பாடநூல்களில் இடம்பெற்றது. தனிநாயகம் அடிகள் "இப்பாடலின் வரிகள்கடந்த அறுபது ஆண்டுகளாக எதிரொலித்தக் கொண்டே இருக்கிறது, தமிழ்ப்பற்றின் முதன்மையான பாடல் எனும் அதன் பெருமையை விஞ்சும் ப டைப்பு எதுவுமில்லை" என்று 1963-ல் புகழ்ந்தார்.

இப்பாடலை தமிழக அரசு அனைவரும் பாடும்வண்ணம் வழிவ கை செய்ய வேண்டும் என்கிற கோரிக்கைகள் அறிஞர் அண்ணா ஆட்சிக்காலத்தில் வலுப்பெற்றது. 1969-ல் அண்ணா இயற்கை எய்திவிட,கலைஞர் கருணாநிதி அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். தமிழ்த்தாய் வாழ்த்து முழுவதும் பாடப்படவில்லை என்று இன்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

கரந்தைத் தமிழ்ச்சங்க விழாக்களிலேயே முதல் ஆறு வரிகள் மட் டுமே பாடப்பட்டு வந்தன என்பதை சுட்டிக்காட்டுகிறார் கரந்தை ஜெயராஜ். அச்சங்கத்தின் 1917-ம் ஆண்டறிக்கையில் தமிழ்த்தாய் வாழ்த்தின் ஆறு வரிகள் மட்டுமே இடம் பெற்றிருந்தது என அவர் கவனப்படுத்துகிறார்.

திரைக்கலைஞர்களுக்கான விருதளிப்பு விழாவில் தமிழ்நாட்டின் வழிபாட்டுப் பாடலாக 'நீராருங் கடலுடுத்த' அமையும் என மார்ச் 1970-ல் கலைஞர் கருணாநிதி அறிவித்தார்.




புகைப்பட நன்றி: kalaignar.dmk.in

பிற மொழிகளை தாழ்த்திப் பேசும் வரிகளைத் தவிர்த்து பாடலை அமைத்துக் கொண்டதாக அவர் குறிப்பிட்டார். ஆரியம் போல் வழக்கழிந்து முதலிய வரிகளும் சேர்க்கப்படவில்லை. ஆயினும், கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் வழக்கத்தை அடியொற்றியே இப்பாடல் வரிகள் அமைந்திருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. மேலும், 'நீராருங் கடலுடுத்த...' பாடலினை தமிழ்நாட்டின் வழிபாட்டுப் பாடலாக ஆக்கிய அரசாணையை கூர்ந்து நோக்கினால் இன்னொன்றும் புலப்படும்.

ஜூன் 17, 1970 -ல் வெளியிடப்பட்ட அரசாணை எண் 1393-ல் தமிழ்நாடு முழுமைக்கும் பொதுவாக வழிபாட்டுப் பாடல் அமையும் வண்ணமே 'நீராருங் கடலுடுத்த ' இருக்கும் என்கிறது. மேலும், 'மதம், குறிப்பிட்ட நம்பிக்கையோடு' தொடர்புடையதாக இல்லாத வண்ணம் இப்பாடல் இருக்குமாறு அமைந்திருப்பதாகவும் அரசாணையில் சொல்லப்பட்டு இருந்தது. பல்வேறு தமிழ்நாட்டு நிகழ்ச்சிகளில் இந்து மதப் பாடல்களும்,

வடமொழி,தெலுங்கு பாடல்களும் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்த போது இந்த அறிவிப்பு அவற்றை மாற்றியது. மேலும், பாயிரத்தில் உள்ள சிவனைப்பற்றிய குறிப்பு இடம்பெறாமல் போனதையும், 'தமிழ்த்தெய்வ வணக்கம்' ஆனது 'தமிழ்த்தாய் வாழ்த்தாக' மாறியதையும் மதச்சார்பற்ற, அனைவருக்கும் பொதுவான தமிழ் அடையாளத்தை முன்னிலைப்படுத்தும் முயற்சியாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. (ஆங்கிலத்தில் 'Hymn on Goddess of Tamil' என்றே அரசாணை குறிப்பிடுகிறது'.)

மேற்சொன்ன அரசாணையை ஒட்டி 23 நவம்பர் 1970-ல் அரசாணை ஒன்று வெளியிடப்பட்டது. அதில் 'நீராருங் கடலுடுத்த ....' வழிபாட்டுப்பாடலாக விழாக்களின் துவக்கத்தில் பாடப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அரசுத்துறை, கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும் நிகழ்ச்சிகளில் இப்பாடல் மோகன ராகத்தில், திஸ்ர தாளத்தில் இசைக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டு இருந்தது.



GOVERNMENT OF TAMIL NADU

PUBLIC (POLITICAL) DEPARTMENT

Memo. No. 3584/70-4, 23rd November 1970

Prayer Song—Singing of Tamil piece from "Manonmaneeyam", written by Thiru P. Sundaram Pillai as prayer song at the commencement of all functions organised by Government Departments, Local bodies and educational institutions—Tune in which the song is to be sung—Orders issued.

Read—the following papers:—

G.O. Ms. No. 1393, Public (Political), dated 17th June 1970.

Memo. No. 3584/70-4, Public (Political), dated 23rd November 1970.

In the Government Order cited, orders were issued that the piece from "Manonmaneeyam", written by Thiru P. Sundaram Pillai mentioned therein, should be sung as a prayer song at the commencement (and not at the end) of all functions organised by Government Departments, Local Bodies and educational institutions.

2. The Government now direct that the above prayer song should be sung in the Raga "Mohanam" [illegible] and in the Thisra Tala [illegible] as composed by Thiru M. S. Viswanathan. A copy of the song with the swaras as composed by Thiru M. S. Viswanathan is appended to this order for guidance.

T. V. Venkataraman,
Joint Secretary to Government.

To all Heads of Departments (including Collectors), District Magistrates, District Judges and Superintendents of Police.
[illegible]

Memo no. 3584/70-4

காஞ்சி மடாதிபதி விஜேயந்திரர் கலந்து கொண்ட நிகழ்வொன்றில் 'தமிழ்த்தாய் வாழ்த்து' இசைக்கப்பட்ட போது கண்மூடி அமர்ந்து இருந்தார். இதனையடுத்து கண் இளங்கோ என்பவர் ராமேஸ்வரத்தில் உள்ள காஞ்சி மடத்தின் கிளையில் நுழைந்தார். அதற்கு மட மேலாளர் எதிர்ப்பு தெரிவிக்க அவரை கண் இளங்கோ மிரட்டியதாக . மடத்தின் மேலாளர் காவல் துறையில் புகார் அளித்து இருந்தார். இது தொடர்பாக தன்மீது பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்யுமாறு மதுரை உயர்நீதிமன்றத்தை கண் இளங்கோ நாடினார்.

இவ்வழக்கில் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் மேற்குறிப்பிட்ட இரண்டு அரசாணைகள் 1393, 3584/70-4 ஆகியவற்றை மேற்கோள் காட்டினார். 'தமிழ்த்தாய் வாழ்த்து' வழிபாட்டுப் பாடலாகவே இந்த அரசாணைகள் வரையறுத்து இருப்பதைச் சுட்டிக்காட்டி, 'தமிழ்த்தாய் வாழ்த்து வழிபாட்டுப்பாடல், அது, கீதம் அன்று". என்று குறிப்பிட்டார். தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும் போது எழுந்து நிற்க வேண்டும் என்று எந்தச் சட்டமும், அரசாணையும் இல்லை என்பதையும் அத்தீர்ப்பில் கவனப்படுத்தினார்.



மேலும், "*தமிழ்த்தாய் வாழ்த்திற்கு உச்சபட்ச மரியாதையும், மதிப்பும் தரவேண்டும்.*

தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும் போது கூட்டத்தினர் எழுந்து நிற்பது மரபாக இருக்கிறது என்பது உண்மை. ஆனால், ஒரே வழியில் தான் மரியாதை செலுத்த வேண்டும் என்று கேள்வி எழுப்பிக்கொள்ள வேண்டும். பன்மைத்துவத்தையும், வேறுபாடுகளையும் நாம் கொண்டாடும் போது, ஒரே வழியில் தான் மரியாதை செலுத்த வேண்டும் என்று வலியுறுத்துவது போலித்தனமானது. .....

ஒருவர் சந்நியாசி ஆகும் போது, பண்பட்ட மரணத்துக்கு ஆட்படுகிறார். அவர் மறுபிறப்பு எடுத்ததாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். சந்நியாசி எளிய வாழ்வினையே வாழ்கிறார்.அவர் வழிபாட்டில் ஈடுபடும் போது, அவர் எப்போதும் தியான நிலையில் இருப்பார். தமிழ்த்தாய் வாழ்த்து வழிபாட்டுப்பாடல் என்பதால் சந்நியாசி தியான நிலையில் அமர்ந்து இருப்பது நிச்சயம் நியாயமானது. இந்த நிகழ்வில், மடாதிபதி தியான நிலையில் அமர்ந்து கண்மூடி இருந்தார். அது அவர் தமிழ்த்தாய்க்கு மதிப்பும், மரியாதையும் செலுத்தும் விதமாகும்." என்றும் தீர்ப்பில் குறிப்பிட்டார் நீதிபதி

இதனையடுத்து, தமிழ்நாடு அரசு அரசாணை (நிலை) எண் 1037 ஐ 17.12.2021 ல் வெளியிட்டது. இதில் தமிழ்த்தாய் வாழ்த்தின் தோற்றம், வளர்ச்சி, அதனை அரசு நிகழ்ச்சிகளில் விழாவின் துவக்கத்தில் பாடவேண்டும் என்று ஆணையிட்ட அரசாணைகள் ஆகியவை குறிப்பிடப்பட்டு, ஏழாவது பத்தியில் 'தமிழ்த்தாய் வாழ்த்து' தமிழ்நாட்டின் மாநிலப்பாடலாக அறிவிக்கப்பட்டது. மேலும், தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் கல்வி நிறுவனங்கள்,பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும் நிகழ்வு தொடங்குவதற்கு முன்பு தமிழ்த்தாய் வாழ்த்து

கட்டாயம் பாடப்பட வேண்டும் என்றும், தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும் போது அனைவரும் தவறாமல் எழுந்து நிற்க வேண்டும் என்றும் ஆணை எண் 1037 ஆணையிட்டது. மேலும், பாடல் பாடப்படும் போது எழுந்து நிற்பதில் இருந்து மாற்றுத் திறனாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோருக்கு விலக்கும் வழங்கப்பட்டுள்ளது.



மனோன்மணீயம் (1891)

ஆசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை

மனோன்மணீயம்
நாடகம்

(ஐந்தங்கத் தமிழ்க் கவிதைநாடகம்)

(முழுமையாக)

https://www.keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-sep16/31519-2016-09-23-03-25-43



மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் (MSU), திருநெல்வேலியில் உள்ள ஒரு அரசுப் பல்கலைக்கழகம். 1990-ல் நிறுவப்பட்ட இது, தென் தமிழகத்தின் திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு கல்வி சேவை வழங்குகிறது. 'மனோன்மணீயம்' நாடகத்தை எழுதிய பேராசிரியர் சுந்தரனார் பெயரில் அமைந்த இப்பல்கலைக்கழகம், கலை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளில் பல்வேறு படிப்புகளை வழங்குகிறது.

முக்கிய அம்சங்கள்:

- **தோற்றம்:** செப்டம்பர் 7, 1990-ல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலிருந்து பிரித்து நிறுவப்பட்டது.
- **வளாகம்:** திருநெல்வேலியில் உள்ள அபிஷேகப்பட்டியில் 550 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள முதன்மை வளாகம்.
- **கல்வி:** 26-க்கும் மேற்பட்ட கற்பித்தல் துறைகள், 6 உறுப்புக் கல்லூரிகள் (Mano Colleges) மற்றும் 100-க்கும் மேற்பட்ட இணைப்புப் பெற்ற கல்லூரிகள்.

- **தூரக்கல்வி:** மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்ககம் பல்வேறு படிப்புகளை வழங்குகிறது.

- **வரலாறு:** 'மனோன்மணீயம்' என்ற புகழ்மிக்க நாடகத்தை எழுதிய பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை, 'தமிழ்த்தாய் வாழ்த்து' பாடலின் ஆசிரியர், அவர் நினைவாக இப்பல்கலைக்கழகம் பெயரிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம்: Manonmaniam Sundaranar University.

https://www.msuniv.ac.in/index.php

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

MANONMANIAM SUNDARANAR UNIVERSITY
Reaccredited with 'A+' Grade (CGPA 3.46 Out of 4.0) by NAAC (4th Cycle)
Tirunelveli - 627012, Tamilnadu, India

குறிக்கோளுரை	அறிவே அனைத்து ஆற்றலும்
வகை	பொதுத்துறை பல்கலைக்கழகம்
உருவாக்கம்	1990
வேந்தர்	இராசேந்திர அர்லேகர்[1]
துணை வேந்தர்	என். சந்திரசேகர்[2]
அமைவிடம்	திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா 8.7635°N 77.6485°E
வளாகம்	ஊரகம்
சேர்ப்பு	பல்கலைக்கழக மானியக் குழு, தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அவை
இணையதளம்	http://www.msuniv.ac.in

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களுள் ஒன்றாகும். இது 7 செப்டம்பர் 1990 அன்று திருநெல்வேலி மாநகரில் கொக்கிரகுளம் பகுதியில் இருந்த மாவட்ட ஆட்சியக வளாகத்தில் தொடங்கப்பட்டது. கஜேந்திர காட்கர் கமிஷன் பரிந்துரைக்கமைய மதுரை காமராசர் பல்கலைக்கழக தென்பகுதிக் கல்லூரிகள் பிரிக்கப்பட்டு இப்பல்கலைக்கழகம் உருவானது.



பல்கலைக்கழக நுழைவாயில்

இப்பல்கலைகழகத்திற்கு தமிழ் பேராசிரியரான மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தில் கலை, மொழி, அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய 24 துறைகள் உள்ளன. திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமாரி மாவட்டங்களில் உள்ள 109 கல்லூரிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இத்ன் முக்கிய வளாகம் மற்றும் பல்கலைக்கழக துறைகள் செயல்பட 520 ஏக்கர் அபிஷேகபட்டியில், திருநெல்வேலியில் அமைந்துள்ளது. மற்றொரு 120 ஏக்கர் ஆழ்வார்குறிச்சியிலும், சுற்றுச்சூழல் அறிவியல் துறை பரமகல்யாணி கல்லூரியிலும் (0.49 கி.மீ.) மற்றும் ராஜக்கமங்கலதில் கடல் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தில் 70 ஏக்கர் (280,000 மீ) உள்ளது.

பல்கலைக்கழக அதிகாரத்தின் கீழ் பட்டியலில் 65,000 மாணவர்கள், 109 இணைப்பு கல்லூரிகள், 9 மனோ கல்லூரிகள்உள்ளது.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் (MSU) , அதாவது திருநெல்வேலி, தூத்துக்குடி,தென்காசி,மற்றும் கன்னியாகுமரி உள்ளிட்ட நான்கு தெற்கு மாவட்டங்களில் உள்ள மக்களின் நீண்ட கால கல்வியின் தேவைகளை பூர்த்தி செய்ய 7 செப்டம்பர் , 1990 ஆம்

ஆண்டு தொடங்கப்பட்ட்து. பல்கலைக்கழக பட்டியலில் 65,000 மாணவர்கள், இதன் கீழ் 109 இணைப்பு கல்லூரிகள், 5 மனோ கல்லூரிகள் மற்றும் 1 சட்டகல்லூரி உள்ளது. இவற்றுள் மூன்று கல்லூரிகள் (செயின்ட் ஜான்ஸ் கல்லூரி], இந்து கல்லூரி, சாரா டக்கர் கல்லூரி) 100 ஆண்டுகள் பழைமை வாய்ந்தவை.

பல்கலைக்கழகத்தில் 24 கல்வி துறைகள் உள்ளன ராஜக்கமங்கலதில் உள்ள கடல் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல் மையம் ஆழ்வார்குறிச்சி பல்கலைகழக மாணவர்கள் அனைத்து பல்கலைக்கழக துறைகளில் இந்தியா, ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் UNO பல்வேறு நிதி நிறுவனங்களிலிருந்து ஆராய்ச்சி திட்டங்கள் பெறுகின்றனர். முதுநிலை படிப்பு, எம்.பில் மற்றும் பிஎச்.டி திட்டங்கள் (பகுதி நேரம் மற்றும் முழு நேரம்) உள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, புது தில்லி, மத்திய அரசின் தலைமை உயர் கல்வி அமைப்பு, மார்ச் 29, 1994 ஆம் ஆண்டு முதல் நிதி உதவி பெற அனுமதி வழங்கியுள்ளது.

இணை கல்லூரிகளில், தொழில் முனைவோருக்கான ஆர்வமுள்ளவர்களுக்கு ஒரு ஆண்டு கால டிப்ளமோ படிப்புகள், மேலும் திறன் வளர்ச்சி டிப்ளமோ மற்றும் சான்றிதழ் படிப்புகளை வழங்குகிறது.

OUR HISTORY

Manonmaniam Sundaranar University (MSU) is a dynamic institution of higher learning, set in a rural milieu of southern Tamil Nadu, with a campus spread of 550 acres.

The University was established by the Government of Tamil Nadu as a teaching-cum-affiliating University on 7th September, 1990 to cater to the long-felt needs of the people of the three southern most districts of Tamil Nadu viz., Tirunelveli, Tenkasi, Thoothukudi, and Kanyakumari.

It is named after the renowned Tamil Poet Scholar, Professor P. Sundaram Pillai (1855-1897), the author of the famous verse drama Manonmaniam. It is his

poem that has become "Tamil Thaai Vazhthu" the official invocation song sung in all functions in Tamilnadu.

The motto of the University is "Reaching the Unreached". Around 2834 students are studying in this institution directly. The University has under its jurisdiction 104 affiliated Colleges and 6 University Colleges, about 1,30,885 students in regular mode and 11,236 students in distance education mode.



These colleges, amongst which five are over 100 years old viz., St.John's College, M.D.T. Hindu College, St.Xavier's College, Scott Christian College and Sarah Tucker College the oldest womens college in the state, have contributed decisively to the cause of higher education of his region.
The main focus of the university is to produce individuals who have the expertise and intellectual curiosity to make a difference in their profession and the society and in conducting the research needed to meet the challenges facing the contemporary world.

Majority of the students of this University belong to rural and economically weaker sections of the society. Hence, this University imparts education at nominal and affordable cost. The curriculum of the Programmes offered by this University are periodically updated and the University has resourceful teachers to deliver the same.

காணொளிகள்

01] மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் 32 வது பட்டமளிப்பு விழா | TN Governor RN Ravi
https://www.youtube.com/watch?v=hRtTeUSHVac [1:31:10]

02] **மனோன்மணியம் சுந்தரனாரின் வாழ்வும் பணியும் – அ.கா.பெருமாள்**

https://www.youtube.com/watch?v=eafO_6sSaQ4 [54:48]

03] மனோன்மணீயம் பெ. சுந்தரனார்
https://www.youtube.com/watch?v=KXMjVLQs8n8 [10:29]

(😊)(😊) 'மனோன்மணி' சுந்தரனார் (😊)(😊)









